Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :158 சித்திரை 18ஆம் நாள் வியாழக்கிழமை 30 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனாவின் பிடியிலிருந்து மீண்டவர்கள் சோதிக்கப்படார்

யாழ்ப்பாணம், ஏப். 30
கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அதிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளவர்கள் 14 நாள் தனிமைப்படுத்தல் முடிவ 02

# தேர்தல் பிற்போகலாம் நாடாளுமன்றம் கூடாது

### எதிர்க்கட்சிகளின் மிரட்டல் கோரிக்கைக்கு அடிபணியத் தயாரில்லை என்கிறார் மஹிந்த



கொழும்பு, ஏப்ரல் 30
'இரு வாரங்களில் நாடு சுமுகமான நிலைக்கு வராவிடின் ஜூன் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவது சந்தேகம் தான். சிலவேளை தேர்தல் பின்னுக்குப் போகக்கூடும். அதற்காகப் பழைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒருபோதும் கூட்டவே மாட்டார். பொதுத்தேர்தல் இடம்பெற்ற பின்னர் புதிய நாடாளுமன்றத்தைத்தான் அவர் கூட்டுவார்' இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். 02




## பொதுத்தேர்தலில் மீண்டும் இழுபறி!!

### மே 15இல்தான் முடிவு என்கின்றார் தேசப்பிரிய

கொழும்பு, ஏப். 30
ஜூன் 20ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டுமானால் மே 15ஆம் திகதிக்குள் கொரோனா பரவல் கட்டுக்குள் வந்து நாடு வழமைக்குத் திரும்ப வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்தத் தினத்தில் 02

## பொதுத் தேர்தல் சாத்தியமில்லை

### கொரோனாவை இல்லாதொழிக்க ஒன்றிணைவோம் என்கிறார் ரணில்

கொழும்பு, ஏப். 30
இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. தற்போதைய புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதி இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று நான் நம்பவில்லை. முதலில் கொரோனா 02

## இன்று இரவு முதல் மீண்டும் ஊரடங்கு!

யாழ்ப்பாணம், ஏப். 30
நாடு முழுவதும் நாளை வெள்ளிக்கிழமை முழுமையான ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில், இன்று இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு உத்தரவு மே மாதம் 4ஆம் திகதி அதிகாலை 5 மணி வரையில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கு முன்னர் நாளை வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கே ஊரடங்குச் சட்டம் அமுலாகும் 02

## விலை நிர்ணயம்: சீனிக்கு இரத்து!

கொழும்பு, ஏப். 30
வெள்ளைச் சீனியின் அதிகபட்ச விலையைக் குறிப்பிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.
குறித்த வர்த்தமானி அறிவிப்பில், வெள்ளைச் சீனியின் அதிகபட்ச விலை 100 02

## சிறார்களுக்கு சஹ்ரான் குழு ஆயுதப்பயிற்சி

கொழும்பு, ஏப்.30
புத்தளம், வனாத்தவில்லு பகுதியிலுள்ள அரபுக் கல்லூரியொன்றில் பயின்ற மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகவும், 21/4 தற்கொலை குண்டு தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் அங்கு விரிவுரை நிகழ்த்தியுள்ளதாகவும் சி.ஐ.டியினர் மேற்கொண்ட விசாரணை மூலம்தெரியவந்துள்ளது. 2008ஆம் ஆண்டு முதல் 2018 02

## பாடசாலைகளை கோரும் பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 30
இராணுவத்தினர் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைப்பதற்கு பாடசாலைகளை ஒருபுறம் கோர, மக்கள் தொடர்பாலுக்காகப் பாடசாலைகளைப் பொலிஸார் கோரும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.
பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் மக்கள் தொடர்பா 02

## ஊரடங்கு உத்தரவின்போது இலங்கை அரசு படுமோசம்!

### ஐ.நா கடும் அதிருப்தி

கொழும்பு, ஏப். 30
ஊரடங்கு உத்தரவின்போது மிக மிக மோசமாக நடந்துகொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுமார் 85 நாடுகளில் தற்போது ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்கு வேளையின்போது மக் 02

## மயங்கி வீழ்ந்து விவசாயி சாவு!

யாழ்ப்பாணம், ஏப். 30
பிரான்பற்று வயலில் கௌபீ நடுகைக்குப் பாத்தி போட்டுக் கொண்டிருந்தவர் மயக்கமுற்று கீழே விழுந்து உயிரி 02

## கொரோனா 649

### நேற்று 30 பேர்

கொழும்பு, ஏப். 30
இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 30 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்துக்கொரோனா வைரஸ்தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 619 02

## 53 பேருக்குச் சோதனை எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஏப். 30
வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் பல இடங்களைச் சேர்ந்த 53 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகளில் ஒருவருக்கும் தொற்று இல்லை என பரிசோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
கொரோனாத் தொற்றுச் 02

## ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்கள் இரு மாதங்களுக்கு நீடிப்பு

### வடக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களில் தற்காலிக இணைப்புகளைப் பெற்று வேறு இடங்களில் பணியாற்றுபவர்க்ள் அதே இடங்களில் மேலும் இரண்டு மாதங்கள் பணியாற்ற முடியும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செய 02

## மீண்டவர்கள்...

டைய மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் 5 பேர் வெலிகந்த மருத்துவமனையில் சிகிச்சை முடித்து வீடு திரும்பியுள்ளனர். அவர்கள் தற்போது 14 நாள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். சுய தனிமைப்படுத்தல் முடிவடையும்போது அவர்களுக்கு தொற்றுக்கான பரிசோதனை மீள மேற்கொள்ளப்படுமா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார அமைச்சு தெளிவான அறிவுறுத்தலை எங்களுக்கு வழங்கியுள்ளது. கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின்னர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும். தனிமைப்படுத்தல் முடிவடைய அவர்களை மீண்டும் சோதனைக்கு உட்படுத்தத் தேவையில்லை. ஏனெனில் சிகிச்சையளிக்கப்படும்போது அவர்களுக்கு சோதனை முன்னெடுக்கப்படும். இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக அவருக்கு தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவுகள் கிடைத்த பின்னர்தான் அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். எனவே அவர்களுக்கு சோதனை முன்னெடுக்க வேண்டிய தேவை இல்லை - என்றார். (ம-ஒ,5)

## சிறார்களுக்கு...

ஆம் ஆண்டு டிசம்பர் வரை குறித்த பாடசாலை இயங்கியுள்ளது. பெற்றோரை இழந்த சிறார்களை இலக்குவைத்தே அங்கு கல்வி போதிக்கப்பட்டுள்ளது. 30 முதல் 40 வரையான மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

21/4 தாக்குதல் சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்டவர்களில் 14 வயது சிறுவன் ஒருவர் வழங்கிய தகவ'லின் அடிப்படையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது என அரச சுயாதீன தொலைக்காட்சி நேற்றிரவு செய்தி வெளியிட்டது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன மேலும் தெரிவித்ததாவது:

'21/4 தாக்குதலுக்கு திட்டமிட்ட சஹ்ரான் அங்குசென்று சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். அடிப்படைவாதத்தை பரப்பும் வகையில் காணொலிகள் காண்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய சில குண்டுதாரிகளும் அங்கு சென்று சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளனர். இஸ்ரேல், பலஸ்தீன போர் தொடர்பான சில காட்சிகள், உள்நாட்டு போரின்போது இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களும் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த விவகாரம் தொடர்பிலும் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன - என்றார். (ம-44,22)

## பாடசாலை...

டல்களை ஏற்படுத்தி அங்கே மக்களுக்கான பணிகளையாற்றுவதன் ஊடாக பொலிஸ் நிலையத்துக்கு பெருமளவு மக்கள் வருவதைத் தவிர்க்க முடியும் என்று கருதுகின்றனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலேயே பொலிஸார் பாடசாலைகளைக் கோரியுள்ளனர். இதற்கு பாடசாலைச் சமூகத்திடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பொலிஸாருக்கு பாடசாலைகள் இதுவரை வழங்கப்படாதபோதும், தொடர்ந்து அழுத்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-ஒ,5,105)

## கொரோனா...

இலிருந்து 649ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் மேலும் 2 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 134 இலிருந்து 136ஆக உயர்ந்துள்ளது. இதேவேளை மேலும் 250 பேர் கொரோனா வைரஸ் தொற்று என்ற சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ம-22)

## விலை...

ரூபாவாக இருந்தது. பக்கெட்டுகளுக்கு 105 ரூபா எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் நுகர்வோர் அதிகார சபையினால் குறித்த வர்த்தமானியை இரத்து செய்யும் வகையிலான புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## தற்காலிக...

லர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வன்னிப் பகுதியில் பணியாற்றிய நிலையில் பல்வேறு காரணங்களுக்காக தற்காலிக இணைப்பை பெற்ற நிலையில் இணைப்புக் காலம் முடிவடைந்தவர்கள், விடுமுறை பெற்றவர்களின் நிலைமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஆசிரியர்கள் பலர் தற்காலிகமாக பிரசவ காலம், மருத்துவம் உள்ளிட்ட பலதேவைகளுக்காக பிற மாவட்டத்துக்கு இணைப்புப் பெற்று பணியாற்றிய நிலையில் அந்தக் கால எல்லை முடிவடையும் பட்சத்தில் மேலும் இரு மாதங்கள் அனைத்து ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களுக்கும் காலம் நீட்டிக்கப்படுகின்றது. இதனால் தற்போது பணியாற்றிய பாடசாலைகளிலேயே ஒப்பமிட முடியும். இதேநேரம் சம்பளம் அற்ற விடுமுறைகளைப் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பணிக்கு திரும்ப முடியாத நிலையில் பதற்றமடையத் தேவையில்லை. அவர்களுக்கும் மேலும் இரு மாதங்கள் சம்பளம் அற்ற விடுமுறை வழங்கப்படும் - என்றார். (ஒ,5,105)

## 53 பேருக்கு...

சந்தேகத்தின் அடிப்படையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு யாழில் ஆய்வுகூடப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 53 பேருக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று ஆய்வுகூடப் பரிசோதனை நடத்தப்பட்டது. இவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 53 பேரில் ஒருவருக்கும் தொற்றில்லை என பரிசோதனைகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. (ம-20)

## ஊரடங்கு...

களுக்கு துன்புறுத்தல், அச்சுறுத்தல் என்பன வழங்கப்பட்டு மோசமாக நடந்து கொண்ட நாடுகளின் பட்டியல் ஐ.நாவால் வெளியிடப்பட்டுள்ளது. 15 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் இலங்கையும் உள்ளது.

இந்தப் பட்டியலில் பிலிப்பைன்ஸ் முதலிடத்தில் உள்ளது. அங்கு கடந்த 30 நாள்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## பொதுத் தேர்தலில்...

தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். தேர்தலை நடத்துவதற்கு சுகாதாரப் பகுதியினரின் உத்தரவாதமும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு வழமைக்கு திரும்பியதும் 35 நாள்களுக்கு பின்னரே வாக்களிப்பை நடத்த முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக தேர்தலை நடத்துவதற்கான சூழல் நிலவுகின்றது என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு திருப்தி ஏற்படவேண்டும்.

இதுவிடயம் குறித்து அரச ஊழியர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், சுயாதீன குழுக்களின் உறுப்பினர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரால் முன்வைக்கப்படும் கருத்துக்களையும், யோசனைகளையும் பரிசீலித்தே தேர்தலை நடத்துவதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு தற்போது முன்னெடுத்து வருகின்றது. தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களைப் பெறுதல் போன்ற நடவடிக்கைகளே இடம்பெற்று வருகின்றன. பொதுத்தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்த முடியாது என்று தேர்தல் ஆணைக்குழு இன்னும் இறுதியான முடிவை எடுக்கவில்லை. ஆனாலும் 10 நாள்களுக்கு ஒரு தடவை கூடி, நாட்டின் சுகாதார நிலைமை குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

தேர்தலை பிற்போடுவது உகந்த நடவடிக்கை அல்ல. ஆனாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதார ரீதியிலான பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் விருப்பம் இல்லாதபோதிலும், தேர்தலை பிறிதொரு நாளுக்கு பிற்போடவேண்டிய நிலைமையே ஏற்படும் - என்றார். (ம-ஒ,5,44)

## பொதுத்...

வைரஸை இல்லாதொழிக்க அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எனது விருப்பம் இவ்வாறு முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஹிந்து பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலே ஜூன் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தத் திகதி குறிக்கப்பட்டுள்ளது. அதை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். கொரோனா ஒழிப்பில் சார்க் அமைப்பு அதன் பிரதான பங்கை வகிக்க வேண்டும். அதில் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வகிபாகமுண்டு. கொரோனா வைரஸை ஒழிக்க தெற்காசியாவுக்கு ஒரு மனிதாபிமானப் பொறிமுறை அவசியம்.

இந்த நிலைமையை நேபாளத்தின் காத்மாண்டுவில் இருந்து மாத்திரம் கையாள முடியாவிடின் இந்தியாவின் பெங்களூர் மற்றும் இலங்கையின் கொழும்பு நகரை அதற்குப் பயன்படுத்தலாம்என்று கூறியுள்ளார். (எ-22)

## இன்று...

என அரசு அறிவித்திருந்தது. ஆயினும் திடீரென இன்று இரவுமுதல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தேர்தல்...

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டுமென எதிரணியிலுள்ள கட்சிகள் பல ஒன்றிணைந்து, ஜனாதிபதியிடம் கூட்டு யோசனையொன்றைக் கையளித்துள்ளன. இதில், மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்பட்டால் அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும், தமது மாதக் கொடுப்பனவுகள்கூட வேண்டாம் என்றும் உத்தரவாதமளித்துள்ளனர். அத்துடன், எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசைக் கவிழ்க்க மாட்டோம் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. இவ்வாறானதொரு நிலையில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார் பிரதமர் மஹிந்த.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கலைக்கப்பட்ட நாடாளுமன்றம், கலைக்கப்பட்ட பழைய நாடாளுமன்றமாகவே இருக்கும். அரசமைப்பின் பரிந்துரைகளைக் கருத்தில்கொண்டே நான்கரை வருடங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. எனவே, எதிர்க்கட்சிகளின் மிரட்டல் கோரிக்கைக்கு அடிபணிந்து பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி தயாரில்லை. அதேவேளை, நாடாளுமன்றம் மீளக் கூட்டப்பட்டால் அரசு கவிழ்ந்துவிடும் என்ற அச்சமும் ஜனாதிபதிக்கு இல்லை. எதிரணியினர் அப்படி நினைப்பது படுமுட்டாள்தனமானது.

நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடக்கும் என்று இப்போது உறுதியாகக் கூற முடியாது. ஏனெனில், இந்த நாட்டிலிருந்து கொரோனா வைரஸை முற்றாக இல்லாதொழிப்பதே எமது நோக்கம். அதன்பின்னர்தான் தேர்தல் நடக்கும். அதன்பின்னர்தான் புதிய நாடாளுமன்றமும் கூடும். அதுவரைக்கும் இந்த நாட்டைக் கொண்டு நடத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது' - என்றார். (ம-22)

## மயங்கி...

ழந்தார். 50 வயது மதிக்கத்தக்க துரைசிங்கம் கந்தசாமி என்னும் நபரே உயிரிழந்தவராவார். (ம-50)


## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



பிறப்பு : 1936.02.04
இறப்பு : 2020.04.29

பருத்தித்துறை 4ம் குறுக்குத்தெருவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 29.04.2020 இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் நல்லடக்கம் 30.04.2020 வியாழக்கிழமை (இன்று) கோரியடி சேமக்காலையில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உறவினர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

தகவல்:
குடும்பத்தினர்

# நாடாளுமன்று கூட்டப்படாது!

## அதற்கு அவசியமே கிடையாது என்கிறார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, ஏப்ரல் 30

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும், மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டவேண்டிய தேவை இல்லை - என்று தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு மார்ச் மாதம் தொடக்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரசின் செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்தி எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றனர். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும், கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றைத் கூட்டுமாறு வலியுறுத்துகின்றனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ம)

## மேலும் 143 மாணவர்கள் இலங்கை திரும்பினர்

கொழும்பு, ஏப். 30

புதுடெல்லியில் சிக்கியிருந்த இலங்கை மாணவர்கள் 143 பேர் நேற்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து விதிக்கப்பட்ட பயண தடை காரணமாக இந்தியாவில் சிக்கியிருக்கும் மாணவர்களை அழைத்துவரும் பணிகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

அந்தவகையில் நேற்று பெங்களூரில் இருந்து 124 இலங்கை மாணவர்களும், மும்பை நகரில் தங்கியிருந்த 163 மாணவர்களும், கோயம்புத்தூரில் சிக்கியிருந்த 113 மாணவர்களும் கடந்த வாரங்களில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் மீது நேற்று இரவு வாள்வெட்டு

கொழும்பு, ஏப். 30

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் அரியகுட்டி நிமலரூபன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 7.30 மணியளவிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. குறித்த பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தியவரும் சிறு காயங்களுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## படையினர் நலமுடன்!

*அமைச்சு தகவல்*

கொழும்பு, ஏப். 30

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட கடற்படையினர் தற்போது நலமுடன் உள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெலிசறை கடற்படை முகாமில் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து தொற்றுநோய் மேலும் பரவாமல் இருப்பதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கடற்படையினரில் சிலருக்கு வைரஸின் அறிகுறிகள் முன்னர் காட்டவில்லை என்றும் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பின்னரே தொற்று இருப்பது கண்டறியப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## பம்பைமடு இராணுவ முகாமுக்குள் நேவி குடும்பங்கள் நேற்று வருகை

வவுனியா, ஏப். 30

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமுக்கு நேற்றையதினம் கடற்படையைச் சேர்ந்த குடும்பத்தினர் அழைத்து வரப்பட்டனர்.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 150க்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களிற்கு கோரோனோ தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தப்படும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுவருகின்ற னர்.

இந்த நிலையில் வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள குறித்த முகாமிற்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 216 பேர் பேருந்துகளின் மூலம் நேற்றுக் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதேவளை வவுனியா மகாகச்சகொடியை சேர்ந்த கோரோனோ தொற்றுக்குள்ளான கடற்படை வீரரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடன் தொடர்புகளை பேணியவர்கள் என 9 பேர் பம்பைமடு முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (ம-110)

## 226 கடற்படைச்சிப்பாய்கள் கொரோனாவால் பாதிப்பு!

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 30

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 226 சிப்பாய்கள் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம்காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

147 சிப்பாய்கள் வெலிசறை கடற்படை முகாமில் இருந்தவர்கள் என்றும் 79 சிப்பாய்கள் விடுமுறையில் சென்றிருந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'கடற்படை முகாமில் இருந்த சிப்பாய்களையும் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றிருந்த சிப்பாய்களையும் வெலிசறை கடற்படைமுகாமில்அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்து பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்தப் பரிசோதனை இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது' எனவும் அவர் மேலும் கூறினார். (ம-22)

## நிரம்பி வழியும் கொழும்பு ஐ.டி.எச்

கொழும்பு, ஏப். 30

கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்கள் 140 பேர் அனுமதிக்கப்பட்டதால் ஐ.டி.எச் மருத்துவமனையின் நோயாளர் உள்வாங்கப்படும் வீதம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள் அதிகரித்தால் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்ற ஏற்பாடுகள் நடக்கின்றன.

இதேவேளை கடற்படையினரின் ஊடாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது. (ஒ.5)

*கடற்படையினரில்*

## தொற்றுக்குள்ளானவர்களை கண்டறியும் பணி முடிவுக்கு

கடற்படையினர் மத்தியில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காணும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது. இவர்களால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இவர்களைச் சார்ந்த குடியிருப்பாளர்கள் மற்றும் அயலவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இருப்பினும் கடற்படையினருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களுக்கு வைரஸ் தொற்று தொடர்பில் சுகாதார மற்றும் புலனாய்வுப் பிரிவினர் கவனம் செலுத்தி வருவதாவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 31 பேர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்டனர். அடையாளம் காணப்பட்டவர்களில் 21 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் மேலும் 6 பேர் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவித்த அவர் நான்கு இராணுவத்தினருக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (ஒ.5)

*உரும்பிராயில்*

## 21 போத்தல் கசிப்புடன் நபர் ஒருவர் கைதானார்

உரும்பிராய் யோகபுரம் பகுதியில் இருபத்தொரு போத்தல் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளோம் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

உரும்பிராய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை நடைபெறுவதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை யோகபுரம் பகுதியிலிருந்து 21 போத்தல் கசிப்பைக் கைப்பற்றியதுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவரை கைது செய்துள்ளனர். (ம-20)

# ரஞ்சனுக்கு பிணை கிடைத்தமைக்கு சுமந்திரன் சொன்ன காரணம் தவறு!

*நீதிமன்று விளக்கம்*

"நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டபூர்வமானதல்ல என்பதால்தான் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பிணை வழங்கப்பட்டதாக சட்டத்தரணி சுமந்திரன் கூறியதாக ஊடகங்களில் வெளியானமை தவறான கருத்தாகும் " என நுகேகொட நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவின் பிணை தொடர்பாக மேலதிக தகவல் கோரி, பொலிஸார் தாக்கல் செய்த மனு தொடர்பாக அறிவிக்கும்போதே, நுகேகொட நீதிவான் இதனை தெரிவித்தார். ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் கைதாகியிருந்தார். அவர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், நீதிமன்றத்தின் வெளியே செய்தியாளர்களிடம் பேசினார். இதன்போது, ஊரடங்கு சட்டவிரோதமானது என சுட்டிக்காட்டியதாகவும், அதனை ஏற்று நீதிபதி பிணை வழங்கியதாகவும் தெரிவித்திருந்திருந்தார். இந்த பிணை தொடர்பாக பொலிஸார் நேற்று முன்தினம் தகவல் கோரி நகர்த்தல் மனுத் தாக்கல் செய்திருந்தனர். ஆதாரமாக நாளேடுகள், இணையச் செய்திகளையும் பொலிஸார் மன்றில் சமர்ப்பித்திருந்தனர். பொலிஸாரின் இந்த நகர்த்தல் பத்திரம் தொடர்பாகவே சுமந்திரன் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டார். இதன்போது நீதிபதி, "பிணை கோரிக்கை மனுவின் நியாயத்தின் அடிப்படையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது. ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளமை சட்டபூர்வமானதல்ல என்ற அடிப்படையில் வழங்கப்படவில்லை" என தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் சட்டத்தரணி சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கும் போது, "ரஞ்சன் ராமநாயக்காவுக்குப் பிணை வழங்கப்பட்ட வழக்கில், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை தவறு என்பது தொடர்பாக நீதிமன்றத்தில் நான் எதுவுமே பேசவில்லை. அத்துடன் நான் அவ்வாறு கூறியதாக அச்சு ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், நீதிவான் முன்னிலையில் சுட்டிக்காட்டியிருந்தார்" என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க ஊரடங்கை மீறியமை தொடர்பான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 29ஆம் திகதி மீளவும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## அரச செலவுகளை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை!!

*மங்கள வைக்கின்றார் 'செக்'*

கொழும்பு, ஏப். 30

ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் அரச செலவுகளைச் செய்ய ஜனாதிபதிக்குச் சட்டரீதியான அதிகாரம் இல்லை என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மங்கள, நாட்டில் கொரோனாத் தொற்று பரவிவரும் மிக முக்கியமான சந்தர்ப்பத்தில் அரச தலைவர் என்ற வகையில் தனது அதிகாரங்களை பயன்படுத்துமாறும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் உதவியுடன் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதியின் பின்னர் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது உட்பட அத்தியவசிய செலவுகளை சட்டரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் அங்கீகரித்துக் கொள்வது அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்லாது திறைசேரியின் செயலாளர் உட்பட அனைத்து அரச அதிகாரிகளும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்பதாக உறுதி பூண்டுள்ளனர் எனவும் மங்கள தனது கடிதத்தில் நினைவூட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரங்களுக்கு அமைய அதன் அனுமதியின்றி நிதியமைச்சருக்கோ, நிதியமைச்சின் செயலாளருக்கோ அரச செலவுகளுக்காக நிதியை ஒதுக்க முடியாது. அப்படி ஒதுக்குவது சட்டவிரோதமானது. இதனால், நாடாளுமன்றத்தை கூட்டி அரச செலவுகளுக்கான நிதியை சட்டரீதியாக ஒதுக்கி கொள்ளவேண்டும் என மங்கள சமரவீர தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

## சோதனை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 30

கொழும்பின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அழைத்து வரப்பட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு இன்றுமுதல் கொரோனாத் தொற்றுச் சோதனை ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்களிடமிருந்து நாளை மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு பரிசோதிக்கப்படும். அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சோதனை மேற்கொள்ளப்படும். தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு 10ஆவது நாளுக்குப் பின்னரே அவர்களிடமிருந்து மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன - என்றார். (ம-ஓ,5)

# நீதிமன்றம்தான் பாடம் புகட்டும்!

*ராஜபக்சக்களுக்கு சஜித் எச்சரிக்கை*

கொழும்பு, ஏப். 30

**'நாட்டின் தற்போதைய அபாய நிலைமையைக் கருத்தில்கொண்டு பொதுத்தேர்தலை ஒத்திவைத்து கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்டக் கோருகின்ற எமது யோசனைகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் தொடர்ந்து நிராகரிப்பார்களாயின் நாம் நீதிமன்றத்தை நாடுவதே ஒரே வழி. நீதிமன்றம்தான் இவர்களுக்கு உரிய பாடத்தைப் புகட்டும்' இவ்வாறு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டக் கோரும் எதிர்க்கட்சிகளின் கூட்டு யோசனைகளை நிராகரிக்கும் வகையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பொதுத்தேர்தல் இப்போது வேண்டாம் எனவும், பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுமாறும் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் நேரில் பல தடவைகள் கோரினோம். கடிதங்கள் எழுதினோம். இப்போது கூட்டு யோசனைகளையும் முன்வைத்துள்ளோம். ஆனால், அவை தொடர்பில் அக்கறை செலுத்தாமல் ஜனாதிபதியும் பிரதமரும் பொறுப்பற்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எனவே, ஜனநாயக ஆட்சி என்ற ரீதியில் இருவரும் நாட்டின் நலன் கருதி மக்களின் நன்மை கருதி எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும். தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். இல்லையேல் நீதித்துறைதான் அவர்களுக்குப் பதிலளிக்கும்' - என்றார். (ம-22)

# தனிமைப்படுத்தலுக்கு அராலியில் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 30

வட்டுக்கோட்டை அராலித்துறையில் அமைந்துள்ள இராணுவ முகாமில் தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கும் செயற்பாட்டுக்கு பிரதேச மக்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இராணுவ முகாமுக்கு தனிமைப்படுத்தலுக்காக நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். அங்கு இராணுவத்தினரை தனிமைப்படுத்தினால் அது தமக்கு ஆபத்தானதாக அமையும் எனவும் மீன்பிடித்தொழில் மேற்கொள்வது சிக்கலானதாக மாறும் எனவும் மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-ஓ,5,7)

## சிசுவை அகற்றிப் புதைத்த இளம் ஜோடி கைதானது!

*இணுவிலில் துணிகரம்*

யாழ்ப்பாணம், ஏப்.30

இணுவில் பகுதியில் உள்ள விடுதியொன்றில் சில மாதங்கள் தங்கியிருந்த ஆணும், பெண்ணும் தமது சிசுவை சட்டத்துக்குப் புறம்பாக அகற்றிப் புதைத்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிசு நவாலியைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரால் சட்டவிரோதமாக அகற்றப்பட்டுள்ளது. கொக்குவிலைச் சேர்ந்த 21 வயதுடைய பெண்ணும், உடுவிலைச் சேர்ந்த 20 வயதுடைய பெண்ணுமே அவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அகற்றப்பட்ட சிசு விடுதியின் முற்றத்தில் புதைக்கப்பட்டுள்ளது. சிசு புதைக்கப்பட்ட இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிமன்றின் உத்தரவைப் பெற்று சிசுவின் சடலத்தை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புரியாத புதிர்

தனிமைப்படுத்தல் நிலையங்களாக பாடசாலைகள் ஒருபோதும் கையகப்படுத்தப்படாது என்று இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சவேந்திர சில்வா விடுத்த அறிவிப்பின் சூடு தணிவதற்கு இடையில், வடக்கில் பல பாடசாலைகளை கையகப்படுத்தும் நடவடிக்கையில் படைத் தரப்பு இறங்கிவிட்டது. கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் பாடசாலைகளை தங்களுடைய தேவைக்காக ஒப்படைக்கும்படி படையினர் வற்புறுத்தி வருகின்றனர். அப்படி படையினர் பாடசாலைகளைக் கோரும்போது 'இராணுவத் தளபதி பாடசாலைகளைக் கையகப்படுத்த மாட்டோம் என்று சொல்லியிருக்கின்றாரே' என்று அதிபர்களோ, கல்விப் பணிப்பாளர்களோ திருப்பிக் கேட்டால் படைத்தரப்பு 'கூலாக' 'இது தனிமைப்படுத்தலுக்காக அல்ல. தற்காலிக தங்குமிடத்துக்காகவே' என்று கூறுகின்றார்கள்.

அப்படி தற்காலிகமாக அங்கு தங்கவைக்கப்படப் போகின்றவர்கள் யார்? என்று கேட்டால் அதற்கு விடையாக விடுமுறைக்குச் சென்று திரும்பிய சிப்பாய்கள் என்று பதிலளிக்கின்றனர். விடுமுறைக்குச் சென்று திரும்பும் சிப்பாய்கள் தங்குவதற்குத்தான் படை முகாம்கள் இருக்கின்றனவே. பின்னர் எதற்கு அவர்களுக்கு தற்காலிகத் தங்குமிடம்? எப்படி ஒரே உள்ளீட்டுப் பொருள்களுடன் இருக்கும் மோதகத்தையும் கொழுக்கட்டையையும் வேறுவேறென்று உண்கின்றோமோ அதே உத்தியையே தனிமைப்படுத்தல், தற்காலிகத் தங்குமிடம் என்ற சொற்களைப் பயன்படுத்தி படைத்தரப்பு தான் நினைத்ததைச் சாதிக்க எத்தனிக்கின்றது.

தற்போது முப்படைகளுக்குள்ளும் கொரோனா பரவத் தொடங்கிவிட்டது. எனவே விடுமுறைக்காக வீடுசென்ற படையினர் கொரோனாத் தொற்றோடு முகாம்களுக்குள் நுழைந்தால் அங்குள்ள படையினருக்கும் அது பரவி கட்டுக்குள் அடங்காமல் சென்றுவிடும். எனவே விடுமுறையால் திரும்பும் படையினரைத் தனிமைப்படுத்தி அவர்களுக்குக் கொரோனாத் தொற்று உண்டா இல்லையா என்பதை உறுதிப்படுத்திய பின்னர் படை முகாம்களுக்குள் விடுவதே பாதுகாப்பு என்று இராணுவம் எண்ணுகின்றது.

அப்படி குறைந்த பட்சம் 14 நாட்கள் விடுமுறையால் வரும் படையினரைத் தனிமைப்படுத்துதலே, 'தற்காலிகமாகத் தங்கவைத்தல்' என்று இன்னொரு பாதுகாப்பான பதத்தைப் பயன்படுத்தி பாடசாலைகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர படாதபாடு படுகின்றது படைத்தரப்பு.

பாடசாலைகள் எப்போதுமே குடியிருப்புக்கள் அடர்த்தியான பகுதிகளுக்கு இடையேதான் அமைந்திருக்கும். எனவே அங்கு இப்படிப் படையினரைத் தனிமைப்படுத்துதல் என்பது கொரோனாத் தொற்று இல்லாத பகுதிக்கும் வலிந்து அதனை வரவழைப்பதற்குச் சமனாகும். இதனால்தான் வருமுன் அணைகட்டுவதற்காக இவ்வாறான தனிமைப்படுத்தல்கள் தங்கள் பகுதிக்குள் நிகழ்வதை மக்கள் எதிர்க்கின்றார்கள். மாறாக ஆளரவமற்ற பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிகழ்வதை எவரும் எதிர்க்கப்போவதில்லை. பெருந்தொகையான படையினரை தனியாள் இடைவெளியைப் பேணியவாறு தனிமைப்படுத்துவதற்கான பல கட்டடங்கள் படைத்தரப்பு வசம் இன்னமும் உள்ளன. குறிப்பாக கீரிமலையில் கட்டிமுடிக்கப்பட்ட பின்னரும் மூடியபடியே இருக்கும் ஜனாதிபதி மாளிகையை இத்தகைய தனிமைப்படுத்தலுக்குப் பயன்படுத்த படைத்தரப்பு ஏன் யோசிக்கவில்லை. அதைவிடவும் காரைநகர் கடற்கோட்டை, யாழ்ப்பாணம் கோட்டை என்பனவெல்லாம் இப்போதும் படைத்தரப்பு வசமே உள்ளன. அங்கு 'தற்காலிக தங்குமிடங்களை' உருவாக்க எந்தச் சிரமமும் இருக்கப்போவதில்லை. கூடவே மிக விசாலமான இடவசதி அங்கிருப்பதோடு பொதுமக்களுக்கும் படைத்தரப்புக்கும் இடையிலான தொடர்பும் இல்லாதிருப்பதால் கொரோனா பரவும் வாய்ப்பும் ஒப்பீட்டளவில் குறைவே.


இப்படி சாத்தியமான, பொதுமக்களுக்கு இடையூறில்லாத பல வழிகள் இருக்கையில் வலிந்துபோய் மக்கள் குடியிருப்புகளுக்கு நடுவில் உள்ள கட்டடங்களிலும் பாடசாலைகளிலும் தங்கள் 'தற்காலிகத் தங்குமிடங்களை' அமைக்க படைத்தரப்பு ஒற்றைக்காலில் நிற்பது ஏன்? என்பதுதான் இன்னும் புரியாத புதிர்.

# கொரோனா போன்றே டெங்கும் பரவுகின்றது

## பி.எச்.ஐ. சங்கம் தெரிவிக்கிறது

கொழும்பு, ஏப். 30

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு மேலதிகமாக எலிக்காய்ச்சல் மட்டுமல்ல, டெங்குத் தொற்றும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாகவும் விழிப்புடனும் இருக்கவேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் உப்புல் ரோஹன மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் தற்போது கொரோனா, டெங்கு மற்றும் எலிக் காய்ச்சல் ஆகிய 3 நோய்த் தொற்றுக்களினதும் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்துள்ளது. அவை இலங்கை மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சைக் கட்டமைப்பில் தாங்கிக் கொள்ள முடியாத மட்டத்தைநோக்கிச் செல்லும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தது.

இதுதவிர, நாட்டில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் டெங்குத் தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை18 ஆயிரத்து 742 ஆக அதிகரித்துள்ளது. ஜனவரியில் 11ஆயிரத்து 595 பேரும், பெப்ரவரியில் 5 ஆயிரத்து 316 பேரும், மார்ச்சில் ஆயிரத்து 537 பேரும், ஏப்ரலில் 294 பேரும், தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். வடக்கில், யாழ்ப்பாணத்தில் இதுவரை ஆயிரத்து 733பேரும், வவுனியாவில் 229பேரும், மன்னாரில் 117பேரும், கிளிநொச்சியில் 104 பேரும், முல்லைத்தீவில் 62 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அமைச்சின் புள்ளிவிவரம் தெரிவித்துள்ளது. (த)



# மாமனிதர் தராகியின் 15ஆவது ஆண்டு நினைவு

மட்டக்களப்பு, ஏப்.30

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமட்டக்களப்பு ஊடக அமையத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டு.மாநகர.முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் நிலாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இதன்போது சிவராமின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கம் செலுத்தப்பட்டது. (ஐ-150)

# திருட்டுக் கும்பலில் ஒருவர் சிக்கினார்

## பளையில் சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 30

அதிகாலை பொழுதில் வீட்டினுள் புகுந்து திருட முற்பட்ட கும்பலில் இருந்து ஒருவர் பிடிக்கப்பட்டு பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் வீட்டின் மேல் ஏறி ஓடுகளைக் கழற்றி வீட்டினுள் இறங்குவதற்கு திருடர்கள் முற்பட்டுள்ளனர். ஓட்டின் மீது இருவர் இருப்பதை அவதானித்த வீட்டின் உரிமையாளர் மகளை எழுப்பி விடயத்தைக் கூறியுள்ளார்.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது தொடர்பில் வீட்டார் அயல் வீட்டாருக்கு அறிவித்தனர். அயலவர்கள், வீட்டார் என அனைவரும் இணைந்து திருடர்களை மடக்கினர். அவர்களில் ஒருவர் மட்டும் பிடிக்கப்பட்ட நிலையில் ஏனையோர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. பிடிபட்ட நபர் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன. ஆரம்பகட்ட விசாரணையில் மாறுபட்ட கருத்துக்களை அவர் தெரிவித்தார் என்றும், தான் மாத்திரமே வீட்டுக்கு வந்ததாகத் தெரிவித்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-6)

# இணையவழி பயில்களம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

சிறகுகள் அமையம் ஊடாக "குடும்ப வரலாறுகளை ஆவணப்படுத்தல்" எனும் தலைப்பிலான இணைய வழிப் பயில்களம் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

பயில்களத்தின் வளவாளராக ஆவணமாக்கச் செயற்பாட்டாளர் தில்லைநாதன் கோபிநாத் கலந்துகொள்வார். பயில்களத்தில் கலந்துகொள்ள forum.sirakukal.online எனும் இணைய முகவரி ஊடாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-222)

# ஆசிரியர்களுக்கு இணைய வழி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.30

ஆசிரியர்களுக்கு கூகிள் போர்ம் மூலமாக வினாத்தாள்களை உருவாக்குதல் தொடர்பிலான இணைய வழிச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு இணையத்தில் நடைபெறும்.

சிறகுகள் அமையம் மற்றும் சுவடி நிறுவகம் இணைந்து செயலமர்வை நடத்தவுள்ளது. செயலமர்வில் தன்னார்வலர்களாக வினாத்தாள்களை உருவாக்க விரும்பும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோரும் கலந்து கொள்ள முடியும்.

செயலமர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் edu.sirakukal.online எனும் இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 0764658482 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-222)

# இராணுவ அதிகாரி ஹெரோய்னுடன் கைது

களுத்துறை, ஏப்.30
பனாங்கொடை இராணுவ முகாமில் சிறப்பு அவசரகால பணிகளில் ஈடுபடுவருதாகத் தெரிவித்து, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி ஹெரோய்ன் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச் சாட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று களுத்துறை வலய பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குகிடைக்கப்பெற்ற தகவலின்படி களுத்துறை, ரஜவத்தைசந்தியில்சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேக நபரை இடைமறித்து நடத்திய விசாரணையின்போது இராணுவ சிறப்பு அவசர காலப் பணிகளுக்காக செல்வதாகக் கூறி போலி ஆவணங்களை பொலிஸாரிடம் கையளித்துள்ளார்.

அவரிடம் நடத்திய விசாரணையின்போதே அவர் முகக்கவசத்தில் மறைத்துவைத்துக் கொண்டு செல்லப்பட்ட 10 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள், இராணுவ அதிகாரிகளுக்கு கட்டளையிடும் படைப் பிரிவுக்கான பதவி முத்திரை (rubber seal) ஒன்று, இராணுவ அடையாள அட்டைகள் இரண்டு, விடுமுறை அனுமதிப் பத்திரம், அலைபேசி இரண்டு, ஹெரோய்ன் போதைப் பொருள் கடத்தலுக்காகப் பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பனவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர். களுத்துறை சேருபிட்ட பகுதியைச் சேர்ந்த அவர் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்றும் களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

# சிங்கள நடிகர் அலெக்சாண்டர் காலமானார்

கொழும்பு, ஏப்.30
சிங்கள சினிமா துறையின் மூத்த நடிகரான அலெக்சாண்டர் பெர்னாண்டோ நேற்றுக் காலமானார். உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் ராகம போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். 50 வருடகாலமாக சினிமாத்துறையைக் கடந்துவந்த இவர், 100க்கும் அதிகமான திரைப்படங்களிலும் நடித்துள்ளார். (க)

# கை கொடுக்கும் இறால் வளர்ப்பு

## பயனாளிகள் மகிழ்ச்சி

**யாழ்ப்பாணம், ஏப்.30**
**யாழ்ப்பாணம் குடாநாட்டின் தொண்டமானாறு, உப்பாறு, ஆவரங்கால், மண்டான் ஆகிய பகுதி நன் நீரேரிகளிலிருந்து பெருமளவில் இறால் அறுவடை மேற்கொள்ளப்படுகின்றது.**

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள கொரோனா அச்சம் மற்றும் தொடர்ச்சியான ஊரடங்கு காரணமாக வறுமையை எதிர்கொண்டிருந்த மக்களுக்கு பேருதவியாகவும், வாழ்வாதாரமாகவும் இந்த திட்டம் அமைந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருவ கால கடலுயிர் வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட அந்தக் கருத்திட்டத்துக்கு அமைய வடபகுதியில் தொண்டமனாறு, மண்டான், ஆவரங்கால், மற்றும் உப்பாறு ஆகிய பகுதிகளிலுள்ள ஏரிகளில் இவ்வருடம் ஜனவரி மாத இறுதிப் பகுதியில் ஏறத்தாழ 40 இலட்சம் இறால் குஞ்சுகள் விடப்பட்டன. நாடளாவிய ரீதியில் இறால் வளர்ப்புக்கு ஏதுவான வளமான அனைத்து இடங்களிலும் இறால் குஞ்சுகளை வளரச் செய்வதன் ஊடாக அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் தமது பொருளாதாரதை உயர்த்திக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்த முடியுமென்ற தூர



நோக்கு திட்டத்துக்கு அமைவாக நிலையான நீர் நிலைகள் அடையாளம் காணப்பட்டு பல இலட்சம் இறால் குஞ்சுகள் விடப்பட்டன.

இதன் ஒரு கட்டமாக யாழ். குடாநாட்டின் தொண்டமானாறு, உப்பாறு, ஆவரங்கால், மண்டான் ஆகிய பகுதி நன்நீரேரிகளில் விடப்பட்ட 40 இலட்சம் இறால் குஞ்சுகள் தற்போது வளர்ந்துள்ளதால் அங்கு மக்கள் இறால் அறுவடையை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் இப்பகுதி ஏரிகளில் சுமார் 8 ஆயிரம் கிலோ இறால் மக்களால் அறுவடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)



கொரொனா தொற்று அச்சம் காரணமாகக் கடந்த 13ஆம் திகதி மூடப்பட்டிருந்த கொழும்பு புறக்கோட்டை மெனிங் சந்தையின் செயற்பாடுகள் நேற்று மீள ஆரம்பமாகின. அதிகாலை 4 மணி முதல் மாலை 4 மணி வரை சந்தையில் விற்பனைச் செயற்பாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-114)

# மரக்கடத்தல்; மூவர் கைது

மட்டக்களப்பு, ஏப்.30
வாழைச்சேனை வன திணைக்களத்துக்குச் சொந்தமான காட்டுப்பகுதியில் சட்டவிரோத மரக் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரு வாகனங்களும், மரங்களும் கைப்பற்றப்பட்டன என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

சந்தேக நபர்களை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது மூவருக்கும் தலா 2 லட்சம் ரூபா சரீர பிணை வழங்கப்பட்டது. (ஐ-150)

# ஹானா சின்கர், சிம்ரின் சிங்குடன் தினேஸ் சந்திப்பு

கொழும்பு, ஏப்.30
வெளிவிவகாரம், தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் தினேஸ் குணவர்தன ஐக்கிய நாடுகள் சபையின் குடியுரிமை பிரதிநிதி ஹானா சின்கர் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங் ஆகியோரைச் சந்தித்துள்ளார்.

தொழிலாளர் அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சர்வதேச குடிவரவு மற்றும் குடியகல்வு அமைப்பின் பணிப்பாளர் சரத் டாஷ்சும் கலந்துகொண்டார். இந்தச் சந்திப்பில் இலங்கையின் பொருளாதாரம், வணிகம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# பில்லியனாக கூடும் கொரோனாச் சாவு!

## சர்வதேச மீட்புக் குழு எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.30
சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாதபட்சத்தில், உலக அளவில் கொரோனா நோயால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை ஒரு பில்லியனாக அதிகரிக்கலாம் என்று என்று சர்வதேச மீட்புக்குழு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த நோயால் உலகளவில் பெரும்பாலான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய நிவாரண உதவிகள் அனைத்து நாடுகளுக்கும் கிடைக்கப்பெறச் செய்யவேண்டும். தவறின் நிலைமை மோசமடையும்.

சர்வதேசரீதியில் இதுவரையில் 31 லட்சத்து 36 ஆயிரத்து 232 பேருக்கு கொரோனா தொற்றுப் பரவியுள்ளது. சர்வதேசரீதியில்



இதுவரையில் 2 லட்சத்து 17 ஆயிரத்து 799 பேர் உயிரிழந்துள்ளனர். சர்வதேச ரீதியில் 9 லட்சத்து 53 ஆயிரத்து 245 பேர் குணமடைந்துள்ளனர் என்றுள்ளது. (த)

இலங்கைக் குடும்பத்துக்கு

# தண்டம் செலுத்திய ஆஸ்திரேலிய அரசு

கொழும்பு, ஏப்.30
ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள இலங்கையை பூர்வீகமாக கொண்ட குடும்பம் ஒன்றுக்கு, ஆஸ்திரேலிய அரசு 2 லட்சம் ஆஸ்திரேலிய டொலர்களை தண்டமாகச் செலுத்த வேண்டும் என்று அந்த நாட்டு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கையை பூர்வீகமாக கொண்ட பிரியா மற்றும் நடேஸ் தம்பதிகள் அவர்களின் இரண்டு பிள்ளைகள் ஆகியோர் இலங்கைக்கு நாடுகடத்தப்படவிருந்தனர். அதை எதிர்த்து அவர்கள் இறுதியாகத் தாக்கல் செய்திருந்த மனுவின் அடிப்படையில் அவர்கள் அங்கேயே தங்கி இருப்பதற்கு அந்த நாட்டின் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சுமார் இரண்டு வருடங்களாக அவர்கள் இது தொடர்பான வழக்குகளில் ஈடுபட்டிருந்த நிலையில், அந்த வழக்குச் செலவினங்களுக்காக குறித்த தொகையை ஆஸ்திரேலிய அரசு வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (த)



## மட்டக்களப்பிலும் நினைவு கூரப்பட்டார் தந்தை செல்வா

மட்டக்களப்பு. ஏப்.30

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் 43வது நினைவு தினமானது நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தலைமையில் மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெற்றது.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்கள், வாலிபர் முன்னணி மாநிலத் தலைவர் கி.சேயோன், மட்டக்களப்பு வாலிபர் முன்னணியின் தலைவர், செயலாளர் உட்பட உறுப்பினர்கள் எனக் குறிப்பிடத்தக்க மட்டுப்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த மார்ச் 31ஆம் திகதி தந்தை செல்வாவின் பிறந்த தினம் மற்றும் ஏப்ரல் 26ஆம் திகதி அன்னாரின் நினைவு தினம். அன்றைய தினங்களில் கொரோணா தொற்று நிலைமையின் நிமித்தம் நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டதால் அந்த நிகழ்வுகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக நேற்று நிகழ்வு சிறிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாதுகாப்பு நடைமுறைகள், சுகாதார சட்டதிட்டங்களைக் கருத்தில் கொண்டு சமூக இடைவெளியைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களுடன் பொலிஸாரின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புடன் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது. (ப-150)

## அனுமதி பெறாத கட்டுமானத்தை இடைநிறுத்தியது மன்.நகர சபை

மன்னார், ஏப்.30

ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி மன்னார் நகர சபைப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்ட விரோத கட்டுமானப் பணிகளை மன்னார் நகரசபை இடைநிறுத்தியுள்ளது.

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட மூர் வீதிப் பகுதியில் உள்ள கற்றல் வள நிலையத்துக்கு அருகில் உள்ள பகுதியில் பல வருடங்களாக இடம்பெற்று வந்த கட்டுமானப் பணிகள், மன்னார் நகர சபையால் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது. நகர சபையிடம் எந்த அனுமதியும் பெறவில்லையென்று தெரிவித்தே இந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எனினும் தடை விதிக்கப்பட்டிருந்த கட்டுமானப் பணியானது ஊரடங்குச் சட்டத்தை பயன்படுத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மக்கள் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் நகரசபையினர் அந்த வேலைகளை உடனடியாக நிறுத்தினர்.

சில நாள்களாக இடம்பெற்ற கட்டுமான வேலையானது போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது என்றும், அரச தொடர்பாடல் மின் கம்பம் ஒன்றையும் அந்தக் காணிக்குள் வைத்து சுற்று மதில் எழுப்பப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதால் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டுமானப் பகுதிகளை முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்துமாறு மூர் வீதிப் பொது மக்கள் நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி உடனடியாக கவனம் செலுத்தி கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த நிலையிலேயே மன்னார் நகர சபை அதற்கு தடைவிதித்துள்ளது என்று நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார். (ப-56)

# அனைத்து வளங்கள் இருந்தும் கல்வியில் வடக்கு கடைசியிடம்

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கவலை

**யாழ்ப்பாணம், ஏப்.30**

**வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வளம் உள்ளிட்ட அனைத்து வளங்களும் இருந்தும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் வடக்கு மாகாணம் கடைசியிடத்தில் உள்ளது. இது கவலைக்குரிய விடயம். இவ்வாறு வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியில் கடைசியிலுள்ள வடக்கு மாகாணம் முன்னுக்கு வரவேண்டுமானால், பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடிய கரிசனை செலுத்துவதன் மூலமே சாத்தியமாகும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை ஆசிரியர் வளம் உட்பட அனைத்து வளங்களும் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடக்கு மாகாணத்தில் 13 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் காணப்படுகின்றனர். அதேபோல் அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் வளங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றம் ஏற்படாது இருப்பதற்கு, பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடிய கரிசனை செலுத்தாமையே காரணமாகும் - என்றார். (ஒ.5,111)

## சௌபாக்கியா வீட்டுத்தோட்டம் கிளி. மக்களுக்கான அறிவிப்பு!

கிளிநொச்சி, ஏப்.30

கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத் தோட்டம் முன்னெடுக்க ஆர்வமுள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கத்தரி (0.25கிராம்), மிளகாய் (0.25கிராம்), வெண்டி (1.67கிராம்), பயற்றை (3கிராம்) ஒவ்வொன்றும் தலா 25 30 விதைகள் மற்றும் அவரை (3கிராம்) விதைகள் அடங்கிய பொதி ஒவ்வொன்றும் ரூபா 20 வீதம் வழங்கப்படும்.

வீட்டுத்தோட்ட செய்கையில் ஆர்வமுள்ளவர்கள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட வீட்டுத்தோட்ட பொதியைப் பெற்றிருக்காதவர்கள், வேறு திட்டங்களின் ஊடாக வீட்டுத்தோட்ட உள்ளீடுகளைப் பெற்றிருக்காதவர்கள் இதைப் பெறமுடியும். குடும்பத்துக்கு ஒரு அங்கத்தவருக்கு மட்டும் பதிவுசெய்யப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்களது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு என்பவற்றை குறுந்தகவல் (எஸ்எம்எஸ்) மூலம் அந்தந்த பிரிவு விவசாய போதனாசிரியர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

0772549877 - திருவையாறு, கனகாம்பிகைக்குளம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், கணேசபுரம், இரத்தினபுரம், 0771636316 - ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், அக்கராயன்குளம் 0779592751 - உருத்திரபுரம், புதுமுறிப்பு 0771974101 மாயவனூர், இராமநாதபுரம், 0777040979 - முழங்காவில், ஜெயபுரம்,0771708069 - பள்ளிக்குடா, நல்லூர், பூநகரி, கொல்லைக்குறிச்சி, 0775886993 - புன்னைநீராவி, புளியம்பொக்கணை, தர்மபுரம், முரசுமோட்டை, கண்டாவளை, குமாரபுரம், உமையபள்புரம்,0773618645 - அரசர்கேணி, கிளாலி, முகமாலை, கோவில்வயல், தர்மக்கேணி, பளை.

மேலதிக விவரங்களை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் 021 228 5726 இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிந்து கொள்ள முடியும். (ஒ,5)

## சிகையலங்கரிப்பு நிலையங்களையும் கவனத்தில் எடுங்கள்

### முன்னாள் எம்.பி. செல்வம் கோரிக்கை

மன்னார், ஏப்.30

சிகையலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. சிகையலங்கார நிலையத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் அரசு உதவிகளை வழங்கவேண்டும். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து வர்த்தக நடவடிக்கைகளும் இயங்கத் தொடங்கியுள்ளன. ஆனால் சிகையலங்கார நிலையங்கள் மூடப்பட்டள்ளன. அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிகையலங்கரிப்பு நிலையங்களை தொடர்ச்சியாக மூட வேண்டிய நிலை காணப்படுமானால், அவர்களுக்கும் அரசு உதவிகளை வழங்கவேண்டும். 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அவர்களுக்கும் கிடைக்கவேண்டும், என்றார். (ஒ,5,56)

## ஏற்று நீர்பாசத்தினத்தின் நீர் வரியை மானியமாக்குக

### பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.30

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர்பாசத்தினத்தின் நீர் வரியை மானிய அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துதருமாறு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் குமாரசாமி தருமராசா கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர்ப் பாசனத் திட்டத்தில், திருவையாறு கமக்கார அமைப்பினரால் திருவையாறு முதலாம் பகுதி, இரண்டாம் பகுதி மூன்றாம் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நீரி விநியோகம் இடம்பெறுகிறது. நாட்டில் ஏற்ப ட்டுள்ள அசாதா ரண சூழ்நிலை காரணமாக கொரோனா நோய்த் தாக்கத்தால், மக்கள் மிகவும் வறுமையில் உள்ளனர். இந்த அசாதாரண காலம் முடியும் வரை இந்த நீரிற்கான நீர் வரியை மானிய அடிப்படையில் வழங்கு வதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும். இவ்வாறு மானியம் வழங்கினால், பட்டினிச்சாவில் மக்களை மீட்பது மட்டுமன்றி தானிய உற்பத்தியில் ஒரு சிறந்த இலக்கை அடைவதற்கான வாய்ப்பாகவும் இது அமையும் என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன் என்றார். (ப-222)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.30
**கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற க.பொ.த சாதாரண் தரப் பரீட்சையின் பெறபேறுகள் கடந்த திங்கட்கிழமை வெளியானது. அதன் அடிப்படையில் தற்போது கிடைக்கப் பெற்ற பாடசாலைகளின் பெறுபேறுகள்:**

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
சி.துஷ்யந்தி - 9ஏ, அ.தர்மிகா-8ஏபி, ந.வக்ஸன்-7ஏ2பி, சி.சுபா -7ஏ2 பி, க.கவிசனா -7ஏபிசி.

**கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்**
பா.தாரணி - 8ஏசி, ர.தமிழ்நிலா-7ஏ2சி, சி.சதுர்சா-6ஏபி2சி,சி.சுடரினி -5ஏ2பி2சி.

**யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை**

**9ஏ (ஆங்கிலம்)**
எஸ்.அபிஷ்னா, எம்.இளநிலா, பு.யாதவி, சி.மதுமிதா, ஆர்.மேரிபேறீனா, த.மிதுர்னா, எம்.நிவேதனா, பே.பூரணி, என்.சாருனி, எ.சிம்மகி, பி.தமிழினி, எல்.வர்ணிகா, எஸ்.வினுஜா, ரி.அபினஜா, பி.அனுசை, எச்.அபிராமி, எம்.பவனுஜா, எஸ்.கஜதாரி, இ.யனுஷ்கி,பி.கஸ்தூரி,ஜி.நைன்சி,வி.சௌமியா, எஸ்.சோவிகா, கே.ஸ்ரீ நாராயனி.

**9ஏ (தமிழ்)**
யு.கேசாஜினி, யோ.நயனி, ஆர்.நிருபினி, சி.நிருசா, கே.சஜித்தா, ரி.சுபனுசா, எஸ்.அபினஜா, எஸ்.அஜந்திகா, ஜி.கம்சாஜினி,ஆர்.காத்தியாஜினி, ஜி.கிருசிகா, எஸ்.மதமி, பே.பவிதாகினி, ஆர்.பிரியங்கா, எஸ்.ரங்கா, எஸ்.சாமந்தி, எஸ்.தெய்வநதி, ஆர்.யாதவி, கே.ஆரபி, பி.அக்ஷலா, எஸ்.லதாங்கி, பி.மகிசானா, ரி.ரிசாந்திகா, எஸ்.சிவதர்சினி, எஸ்.சிறிந்தா, கே.யசோபிகா, வி.அபிநதா, எம்.வதுசா, கே.டிவனி, ஜெ.பிர ணவி, ஜே.சாம்பவி, எஸ்.தர்சிகா, ஆர்.திசானா, என்.விஸ்ணுகா.

**8 ஏபி(ஆங்கிலம்)**
கே.பவனுஷா, எ.கார்த்திகாஜினி, பி.கோபிகா, எஸ்.சஞ்சவி, எஸ்.சங்கவி, எஸ்.வைஷ்ணவி, வி.அபிராமி, எஸ்.கயல்விழி, ரி.கர்ணி, யோ.சாரணி,ரி.செந்துமி, கே.தக்சி, பி.தர்மிகா.

**8 ஏபி(தமிழ்)**
எஸ்.பிருதுவி, ஆர்.கிருஷாயினி, எஸ்.சனோஜா, பி.சுயனி, எஸ்.சுவிதா, ஆர்.அன்ரியா, கே.ஜனுகா, பி.கஜானா, கே.கனிஷ்ரலா, எம்.கிசோதனா, ஆர்.பிரணவி, எஸ் சண்முகப்பிரியா, கே.சஷ்டிகா, பி.பகிரேகா, எஸ்.பிரணவி, எம்.சங்கவி,ஜே.தர்மிதா, பி.திசானி

**8 ஏசி(ஆங்கிலம்)** -இ.ரமீனா, ஆர்.தனுஷா.

**8 ஏசி(தமிழ்)** -ரி.மாதங்கி, எஸ்.நிலக்ஷிகா, ஆர்.சத்துரிஸ்மா.

**எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலை**
ஜெ.கஜீபன் - பி3சி4எஸ்.

**அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்**
ச.நிலாயினி - 4ஏ3பி2சி.

**மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை**
தயாளினி-3ஏ3பி2சிஎஸ், சுவேந்தினி-2ஏ2பி2சிஎஸ், கலைசனா-ஏ4பி3சிஎஸ், சயந்தினி- 2பி5 சிஎஸ்.

**மந்துவில் றோ.ம.க.பாடசாலை**
ந.சாமினி - 7ஏ2பி, பே.கிருசாந் - 6ஏ2பிசி, க.ஜோன்சன்-4ஏ2பி2சிஎஸ், சி.விதுஷா-ஏ3பி2சி2எஸ், ஸ்.அபிதா-3பிசி2எஸ், இ.தேனுஷன் - 2பிசி5எஸ்.

**நெல்லியடி மத்திய கல்லூரி**
எஸ்.கஜன்-9ஏ, பி.மனோஜ்-9ஏ, பி.துசிகரன்-9ஏ, கே.அனுசன்-9ஏ, பி.பவித்ரன்-8ஏபி, ஜெ.ஜெயசங்கர் -8ஏபி, எப்.ஜேரோசினி-8ஏபி, எ.சசிரேகா-8ஏபி, எஸ்.அபினா-8ஏசி, எஸ்.அபினஜன்-7ஏ2பி, வை.கம்சிகா-7ஏ2பி, ரி.தனுஜன்-6ஏ3பி, எ.கோகுலன் -6ஏ3பி, எம்.மேனகா-6ஏ3பி, எஸ்.மயூரவேணி -6ஏ3பி, எஸ்.மதுரங்கா -6ஏ2பிசி, எஸ்.சாரங்கி-6ஏ2பிசி, எம்.திருசிகா-6ஏபி2சி, எம்.கிருத்திகா -5ஏ3பிசி, எல்.ஜனனி- 5ஏ3பிசி, எஸ்.சோபிகா-5ஏ3பிசி, எஸ்.கிசோக் சந்திரகுமார் - 5ஏ2பி2சி, யு.நிசாஜினி -5ஏ4சி, வை.மதுமிதா - 4ஏ4பிசி, ஆர்.கஸ்மி - 4ஏ4பிசி, ஆர்.சஜிகிசான் - 4ஏ3பி2சி, எஸ்.மிதுசன் - 4ஏ3பி2சி, எஸ்.சுகன்யா - 4ஏ2பி3சி, எஸ்.ஜீவிதா - 4ஏ2பி3சி, எஸ்.கபிராஜ் - 4ஏ2பி2சிஎஸ், பி.தெய்வேந்திரன் -3ஏ5பிசி, ஆர்.சினம்சிகா -3ஏ4பி2சி, கே.புனிதா -3ஏ4பிசிஎஸ்.ஆர்.ஜனார்த்தனி 3ஏ3பி2சிஎஸ், ஆர்.தேனுஷன்3ஏ3பி2சிஎஸ், பி.வினுஜா -3ஏ3பிசி2எஸ், எஸ்.மிதுசன் -3ஏ3பி3எஸ், எஸ்.தனுஷிகா -3ஏ3பி2சிஎஸ், எம்.தனுராஜ் -3ஏ3பி2எஸ், என்.பானுஜா -3ஏ2பி4சி, எஸ்.கனிகா - 3ஏ2பி4சி, ஜி.நிலக்ஷிகா -3ஏ2பி2சி2எஸ்.

**அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**
ஜனற்சாரா -9ஏ, விதுஷா-8ஏபி, டக்சிகா-7ஏ2பி, டிலோஜினி-6ஏ2பிசி, ஆதிரை -6ஏபி2சி, ரம்ஷா -6ஏபி2சி, கயூரிகா -6ஏபி2சி, கிலெக்சிகா -5ஏ2பி2சி, சாகித்தியா -4ஏ4பிசி, டிலானி -4ஏ2பி3சி, நிரூசிகா-4ஏபி3சி2எஸ், தர்மி -4ஏ3சி2எஸ், துளசிகா -3ஏ3பி3சி, டயான்சி -3ஏ3பிசிஎஸ், அபர்ணா -3ஏ3பிசிஎஸ், டக்சாயினி -3ஏபி3சி2எஸ்.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**
உ.கம்சாயினி -9ஏ, ம.லட்சிகன் -9ஏ, ஸ்ரீ அம்சவர்த்தனா -9ஏ, து.கேந்தினி -8ஏபி, பு.டினோயினி -8ஏபி, சி.தர்சனன் -7ஏ2பி, இ.சதீசன்- 7ஏ2பி, ம.மதுஷா -7ஏ2பி, நி.மனுசியா -7ஏ2பி, ஜெ.சாருஜா - 7ஏ2பி, க.காயத்திரி -7ஏ2பி, யோ.ஜெசித்தா -7ஏ2பி, தி.கேசிகா 7ஏபிசி, து.கவிப்பிரியன் 6ஏ2பிசி, லோ.தேனுகா -6ஏ2பிசி, வ.சானுஜா -6ஏபி2சி, க.திலீப்- 6ஏபி2சி, தே.கிருஷ்ணவேணி -5ஏ3பிசி, இ.கிசோலா -5ஏ3பிசி, சி.டேனுஜன் -5ஏ3பிசி, ஜ.கவிப்பிரியா -4ஏ5பி, ர.திவ்யன் -4ஏ5பி, ச.அகல்யா -4ஏ3பி2சி, சே.திசாளினி -4ஏ3பி2சி, இ.கிசோகா -4ஏ2பி2சி, இ.அபிநயன்-4ஏபி4சி, சி.சுபந்தினி-4ஏ2பி2சிஎஸ், யோ.கஜன்சிகா -4ஏபி4சி, ம.கஜாதரன் - 4ஏ3பி2சி, த.தனோஜன் -3ஏ4பி2சி, த.நேமிகா -3ஏ4பி2சி, ந.சுவர்ணா -3ஏ3பி3சி, கி.விறொக்சிகன் -3ஏ2பி3சிஎஸ், மு.ஜஸ்மினி-3ஏ6சி.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**
அ.தனுசா 7ஏ2பி, த.அபிராமி 7ஏபிசி, வி.விதுஜன் 6-ஏ3பி, க.டிசாந் -6ஏ2பிசி, ஆ.பிரதீப்- 4ஏ4பிஎஸ், சி.குகப்பிரியன்-4ஏ2பி3சி, ஜெஃஜெனறதனி -3ஏ4பி2சி, க.லக்ஷனா -3ஏ3பி3சி, க.கனெக்ஸ் -3ஏ3பி3சி, கு.டிவிந்தா -3ஏ3பி3சி, ச.தனுசன் -3ஏ2பி3சிஎஸ், ஆ.சாருஜன் -3ஏ்பி5சி.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**
சி.லக்சிகா -9ஏ, கு.மிதுனன் -8ஏபி, பா.பத்மஜன் -8ஏபி, ப.கஜானன் -8ஏசி, த.ஜனனி -7ஏ2பி, மு.சிவதாரணி -7ஏபிசி,இ.தீபிகா -7ஏபிசி, இ.வேணுஜன் -7ஏபிசி, க.கௌதமன்- 6ஏ3பி, ரா.தீபிகா -6ஏ3பி, ம.அஞ்சனா -6ஏ3பி, க.சந்திரராஜ் -6ஏ3பி, பி.மதுரா -6ஏ2பிசி, தி.காயத்திரி -6ஏ2பிசி, பத்மஜா -5ஏ4பி, சு.கார்த்திகன் -5ஏபி3சி, நா.டிசாந் -5ஏபி2சி.

**யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

**9ஏ தமிழ்** - கே.வினுஸ் , வி.பி.சி.ஜோகிதன்.

**9ஏ ஆங்கிலம்** -வி.அஜின் டெஸ்கோ, ரி.ஆர்.பிறைன்காந்.

**8ஏபி ஆங்கிலம் –** ஏ.ஆர்.கிளிவ் பேர்னடின் எறிக்.

**8ஏசி தமிழ் –** ஆர்.ஜதுசன் 8ஏசி

**8ஏசி ஆங்கிலம் –** ஏ.பி.எறிக் பிரவீன் -8ஏசி

**தமிழ்**
எஸ்.ஸ்ரோபன் ராஜ் - 7ஏ2பி, ரி.தொம்சன் -7ஏபிசி, சி.ஏ.யுறேசியன்- 7ஏபிசி, ஏ.ஆர்னல்ட் - 7ஏ2சி எஸ்.கவிசாந் -6ஏபி2சி, ஆர்.பிறெட்லின் - 5ஏ3பிசி, எஸ்.ஜே.சார்ள்ஸ் - 5ஏ3பிசி, ஆர்.சகாஜனன்- 5ஏ2பி2சி ஜி.எஸ்.நாராஜனன் -5ஏ2பி2சி, கே.நிருக்ஷன்-5ஏபி3சி, ஏ.ஜி.சுபக்ஷன் -5ஏபி2சிஎஸ், பீ.பீ.டிலக்ஷன் - 4ஏ3பி3எஸ், கே.எஸ்.றோகித் -4ஏ2பி3சி, கே.அபிநயன்- 4ஏ2பிசி2எஸ், ஜே.அருண் -4ஏ4பிஎஸ், ஈ.எஸ்.மிறின்டா -4ஏ3பி2சி.

**யாழ்ப்பாணம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**
பி.கஜனிகா-9ஏ, எஸ்.அவன்திகா -8ஏபி, கே.கேசிகா -8ஏபி, பி.தினேகா -8ஏபி, எஸ்.அபிலாசினி -7ஏ2பி, எஸ்.சிவலக்சிகா- 7ஏ2பி, எஸ்.பிறவீனா -6ஏ2பிஎஸ், ஏ.அபிஸாசினி -6ஏபி2சி, எஸ்.செந்தூரா -4ஏ5பி, ஏ.காருண்ஜா- 4ஏ3பி2சி, ஐங்கரன் லோஜிதா -4ஏ3பிசிஎஸ், எஸ்.பதான்சலி- 4ஏ3பிசிஎஸ், எஸ்.சுதேசனா -4ஏ2பி3சி, எஸ்.ஜதுசா -4ஏபி3சிஎஸ் , எஸ்.யாழினி -3ஏ4பிசிஎஸ், ஏ.லஜிதா -3ஏ3பிசி2எஸ், எஸ்.சியானி-2ஏ5பி2எஸ், எஸ்.சியானி-2ஏ5பி2எஸ், எஸ்.டொறின் -2ஏ4பி3எஸ், என.நவீனகா -2ஏ4பி3எஸ், எம்.லதுர்சிகா -2ஏ3பி2சிஎஸ், எம்.தீவிகா -2ஏபி3சி3எஸ், ஆர.தர்ஷா -ஏ6பிசிஎஸ் , எஸ்.ரஜிகா -ஏ4பி3சிஎஸ், ஆர்.விதுஷா -ஏ3பி3சி2எஸ், என். நியூசிகா- ஏ3பி3சி2எஸ் ,எஸ்.ஷகானா -ஏ2பி3சி3எஸ், ரி.துளசி -ஏ2பிசி2எஸ், எஸ்.அபிசனா -ஏபி5சி2எஸ், ரி.றஜீபா -ஏபி4சி3எஸ் , வி.அபிராமி -ஏபி4சி3எஸ் ,ஆர்.பிரியங்கா-ஏபி3சி4எஸ்

(க-ந,222,9,159,422,63)

# பரீட்சைக்குத் தோற்றிய 7 மாணவர்களும் சித்தி

வவுனியா,ஏப்.30
வவுனியா வடக்குக் கல்வி வலயத்துக்குட்பட்ட விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

80 வருடங்கள் பாடசாலை வரலாற்றில் இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய 7 மாணவர்களும் சித்தி பெற்று, உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

சின்னப்பூவரசங்குளத்தில் அமைந்துள்ள மிகவும் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள குறித்த பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையுடன் ஏனைய வளப்பற்றாக்குறைகளும் நிலவுகின்றது.

சு.அனித்தா 7ஏ 2சி , து. கபினேஸ் 5ஏ2பிசிஎஸ் , வ.டிவாகர் 2ஏ3பி2சி2எஸ் ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். ஏனைய மாணவர்களும் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வழிப்படுத்திய பாடசாலையின் முதல்வர் க.செல்வதேவன் மற்றும் மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் பாடசாலை சமூகம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். (க-110)



## நீர்த் தொட்டியில் வீழ்ந்து குழந்தை பரிதாபச் சாவு

மட்டக்களப்பு, ஏப்.30

மழை நீர் சேகரிக்கும் தொட்டிக்குள் வீழ்ந்து இரண்டு வயதுக் குழந்தை உயிரிழந்த சோகச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, உண்ணிச்சி பகுதியில் மழை நீர் சேகரிப்பதற்கென தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பட்ட தொட்டியொன்றிலேயே குழந்தை வீழ்ந்து உயிரிழந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

வீட்டு வளாகத்தில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையே தொட்டியில் வீழ்ந்துள்ளது. குழந்தையின் தலை தொட்டியின் அடிப்பாகத்தில் சிக்குண்ட நிலையில் குழந்தை மீட்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. எனினும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்திமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

## நீர் வழங்கல் சபையின் வவு. அலுவலகம் பூட்டு

வவுனியா, ஏப்.30

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வெலிசறை கடற்படைமுகாமில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த கடற்படை அலுவலர் ஒருவருக்கு கொரோனோ தொற்று இருப்பது சில நாள்களுக்கு முன்னர் நடத்திய பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தக் கடற்படை அலுவலரின் உறவினர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா அலுவலகத்தில் கடைமை புரிகின்றார். அவர் தனது உறவினரான கடற்படை வீரருடன் தொடர்பைப் பேணியிருந்தார் என்பதோடு, கடமை நிமித்தம் திணைக்களத்துக்கும் சமூகமளித்துள்ளார்.

அதையடுத்து அந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஊழியர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-110)

உச்சக்கட்டமாக

# கொரோனா பலி நேற்று 8 ஆயிரத்தைக் கடந்தது

பிரிட்டனில் மட்டும் 4,500



வுகான், ஏப்ரல் 31

**உலக அளவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று மட்டும் 8 ஆயிரத்தைக் கடந்தது. உச்சக்கட்டமாக பிரிட்டனில் நேற்று 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.**

சீனாவின் வுகானில் தோற்றம்பெற்ற கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளில் பரவியுள்ளது. இந்த வைரஸால் தினம்தினம் பல்லாயிரம் மக்கள் புதிதாக பாதிக்கப்பட்டுக் கொண்டுள்ளனர். கடந்த நான்கு வாரங்களாக சுமார் 5,500க்கும் குறையாத உயிரிழப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. இந்த நிலையில் உலக அளவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 26 ஆயிரமாக அதிகரித்தது. அதேநேரம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 32 லட்சமாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் உச்சக்கட்டமாக நேற்றுமட்டும் 8 ஆயிரத்துக்கும் அதிகமான உயிரிழப்புக்கள் கொரோனாவால் சம்பவித்துள்ளன. பிரிட்டனில் மட்டும் சுமார் 4 ஆயிரத்து 500க்கும் அதிகமானவர்கள் நேற்று உயிரிழந்தனர். (ம)


## கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

ஹற்றன், ஏப்.30

பத்தனை, மவுண்ட்வேர்ணன் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

திம்புள்ள பத்தனை பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 45 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன. சந்தேகநபரை ஹற்றன் நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



## மக்கள் வங்கியின் விசுவமடு கிளையை திறக்க கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.30

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் உள்ள மக்கள் வங்கியிள் கிளையை திறந்து மக்களுக்கான சேவையை வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து நேற்று வரையான் காலப் பகுதிக்குள் ஓரிரு நாள்களே அந்தக் கிளை திறக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த வங்கிக் கிளை பூட்டிய நிலையில் உள்ளதால், 18க்கும்மேற்பட்டகிராம மக்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சி அல்லது புதுக்குடியிருப்பில் உள்ள மக்கள்வங்கிக்கிளைகளுக்குச் சென்று தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவால் போக்குவரத்து வசதிகளும் சீராக இல்லை, மக்கள் கிளிநொச்சிக்கோ, அல்லது புதுக்குடியிருப்புக்கோ செல்ல முடியாத நிலையில் உள்ளனர். இதனால் விசுவமடு மக்கள் வங்கி கிளையினை திறக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ப-113)

## திருவினையானது யானையின் முயற்சி

கொழும்பு, ஏப்.30

ஆறு ஒன்றுக்குள் வீழ்ந்த யானை எவரின் உதவியும் இல்லாமல் மீண்டெழுந்த சம்பவம் பொலநறுவை மாதுருவோய பகுதியில் நடந்துள்ளது. அது தொடர்பான காணொலி ஒன்று கிடைத்துள்ளது என்று வனவள ஜீவராசிகள் திணைக்ளத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆற்றில் இதற்கு முன்னர் ஒன்றுக்கு மேற்பட்ட யானைகள் தவறி வீழ்ந்துள்ளன. அவை வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகளின் பங்களிப்புடனேயே மீட்கப்பட்டன. இந்த யானை எவரின் உதவியுமின்றி கரையேறியுள்ளது. இந்த யானை நேற்றுமுன்தினம் குறித்த ஆற்றிற்குள் வீழ்ந்ததோடு பல தடவைகள் கரையேறுவதற்கு முயற்சித்துள்ள நிலையில் நேற்றுக் காலை 8 மணியளவில் யானை யின் முயற்சி வெற்றியடைந்துள்ளது என்று தெரிவித்த வனவள ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் அந்த யானைக்கு 20 வயதுகள் இருக்கலாம் எனவும் தெரிவித்தனர். (ப)

## கொரோனா விழிப்புணர்வுக்கு விஷேட பொலிஸ் அணியினர்

வவுனியா, ஏப்.30

வவுனியாவில் கொரோனா தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்தி அதனைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுக்க விஷேட பொலிஸ் அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று இந்த அணி உருவாக்கப்பட்டது. 21 பொலிஸாரைக் கொண்ட இந்த அணி வவுனியாவில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் முன்னெடுக்கவுள்ளது. சன நெரிசல் மிக்க இடங்கள், சுய தனிமைப்படுத்தப்பட்ட வீடுகள் என்பனவற்றில் தொற்று நீக்கி மருந்துகள் வீசிச் சமூகப் பாதுகாப்பை முன்னெடுக்கும் செயற்பாட்டை இந்தக் குழு முன்னெடுக்க வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தம்மிக்க பிரியந்த ,சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸாலடி சில்வா, வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சீ.ஆர்.மானவடு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-18)





## றோட்டறிக் கழகம் குருதிக் கொடை

மன்னார், ஏப்.30

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அவற்றை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யும் வகையில் மன்னார் றோட்டறிக் கழகத்தால் குருதிக் கொடை முகாம் நடத்தப்பட்டது.

மன்னார் ஆகாஷ் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை ஒன்பது முப்பது மணியளவில் குருதிக் கொடை நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் மன்னார் றோட்டரிக் கழக உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட அரச பணியாளர்கள், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியர்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர். குருதி வழங்கிய கொடையாளர்களுக்கு றோட்டறிக் கழகத்தினரால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் பெர்னாண்டோ பன்னிரெண்டு தாதிய உத்தியோகத்தர்கள் குருதி பெறும் சேவையை மேற்கொண்டிருந்தார்கள். (ப-213)

# கொழும்பில் மட்டும் 21 இடங்கள் முடக்கம்

கொழும்பு,ஏப்.30
கொரோனா வைரஸ் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 155 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், 21 இடங்கள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. கொழும்பு 14, நாகலகம் வீதி, கொழும்பு 13, கொட்டாஞ்சேனை வீதியின் 64 ஆம் தோட்டம், கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 11 குணசிங்கபுர, வாழைத்தோட்டம் பகுதிகள், பம்பலப்பிட்டி - பிரிஷ்டா பிளேஸ், மருதானையின் இமாமுல் அரூஸ் மாவத்தை, ஆர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தை, நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தை, கொழும்பு 7, - சுதந்திர சதுக்கம் - 60 ஆம் தோட்டம், ஹெவலொக் லேன், ஒருகொடவத்த - மஜீத் பிளேஸ், மீத்தோட்டமுல்லை - வெடுகொடவத்தை, பெரேரா மாவத்தை பகுதிகள், வெல்லம்பிட்டி - வெலேவத்தை, மஹபுத்துகமுவ - நவார வத்தை, மிரிஹானை - விமலவத்த வீதி, தெஹிவளை - றப்பர் தோட்ட வீதி, அருணாலோக்க மாவத்தை, பிலியந்தலை பகுதியின் கிராமோதய மாவத்தை, பண்னிபிட்டிய - பலனவத்த ஆகிய 21 இடங்களே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

முடக்கப்பட்ட பகுதிகளான நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தை, கொழும்பு 7, - சுதந்திர சதுக்கம் - 60 ஆம் தோட்டம் ஆகிய பகுதிகளில் புதிதாக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, 134 பேர் கொரோனா தொற்று தொடர்பான விசேட பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், மட்டக்களப்பு - புனானை தனிமைபப்டுத்தல் முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தையில் ஏற்கனவே முதலாவது தொற்றாளர் அடையாளம் காணப்பட்ட நிலையில், புதிதாக இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தொற்றாளரின் அயல் வீட்டு பெண் ஒருவரும், குறித்த வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்த இரட்டை பிள்ளைகளில் ஒருவருக்கும் இந்த தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இந்த நால்வருடன் சேர்த்து கொழும்பில் புதிதாக அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில், கொழும்பு 7 , சுதந்திர சதுக்கம் , 60 ஆம் தோட்டத்தில் கண்டறியப்பட்ட தொற்றாளர், ஏற்கனவே பண்டாரநாயக்க மாவத்தைக்குச் சென்று திரும்பி அங்கு மறைந்திருந்த நபரின் அயல் வீட்டைச் சேர்ந்தவர் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார மருத்துவ அதிகாரி, விசேட மருத்துவ நிபுணர் ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

அத்துடன் ஹெவலொக் பகுதியில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் மாநகர சபையில் சேவையாற்றும் ஊழியர் எனவும், அவர் ஏற்கனவே பண்டாரநாயக்க மாவத்தையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளரான லொறிச் சாரதியுடன் ஒன்றாகக் கடமையாற்றியவர் எனவும் விசேட மருத்துவ நிபுணர் ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

இந்த நிலையில், கொழும்புக்குள் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் நோக்கில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில், தொடர்ச்சியாக கொரோனா தொற்றாளர்களைக் கண்டறிய பி.சி.ஆர். பரிசோதனைகள் மக்கள் செறிந்து வாழும் கொழும்பு - தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க)

## கொரோனா தொற்றாளர்களின்

# தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்துச் செயற்படுங்கள்

### ஊடகங்களிடம் பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை



**கொழும்பு, ஏப்.30**

**கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை சுகாதார அதிகாரிகள் பரிசோதனை செய்யும் சந்தர்ப்பங்களில் தொற்றுக்குள்ளானவர்களின் வதிவிடங்களைப் பதிவு செய்து அவற்றைக் காண்பிக்கும் போது, அவர்களின் தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும் என்று அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிடம் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன மேலும் தெரிவித்துள்ளதாவது: கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களைக்கண்டறிந்து, அவர்களுக்குப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சுகாதார வழிமுறை தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்குவது தொடர்பான காட்சிகளை சில தொலைக்காட்சி அலைவரிசைகள் செய்தி ஒளிபரப்புச் செய்வதும், ஏனைய நிகழ்ச்சிகளில் காண்பிப்பதும், பத்திரிகைகளில் செய்திகள் மற்றும் கட்டுரைகள் பிரசுரிப்பதும் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களின் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்து மதிப்பளித்துச் செயற்படும் பட்சத்தில் அவர்கள் பரிசோதனைக்கு சுயமாக முன்வருவதை ஊக்கமளிப்பதாக அமையும். இதுபோன்ற நிகழ்வுகளைப்பதிவுசெய்தல்அல்லது ஒளிபரப்பு செய்வதானது கடமையில் ஈடுபடும் சுகாதார அதிகாரிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளின் போதோ அல்லது தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளின் போதோ சுகாதார அதிகாரிகளுடன் சேர்ந்து செல்வதையும், ஒளிப்பதிவு செய்வதையும் தவிர்த்துக் கொள்ளவும். ஊடகங்கள் தொற்றுக்குள்ளானவர்களின் தனிப்பட்ட கௌரவத்துக்கு மதிப்பளித்துச் செயற்படுங்கள்- என்றார். (க)

# இரு பொலிஸார் மீது தாக்குதல்

முல்லைத்தீவு, ஏப்.30
அழைப்பாணை விடுப்பதற்காக வழக்கு ஒன்றின் எதிர்த்தரப்புவாதியின் வீட்டுக்குச் சென்ற இரு பொலிஸார் மீது இளைஞர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதில் காயமடைந்தனர் என்று கூறப்படும் இரு பொலிஸாரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு கருநாட்டுக்கேணிப் பகுதியில் இடம் பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

பொலிஸார் இருவர் வழக்கு ஒன்றின் எதிர்தரப்பு வாதியை விசாரணைக்கு அழைப்பதற்காக அவரின் வீட்டுக்கு சென்றனர். எதிராளியின் வீட்டில் நின்ற கிராமத்தைச் சேர்ந்த 15 வரையான இளைஞர்கள், பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதில் தலை மற்றும் உடலில் காயமடைந்த பொலிஸார் இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும்

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-19)




# தகவல் அறிய இணையத்தளம்

கொழும்பு, ஏப்.30
இலங்கையில் கொவிட் 19 தொற்று தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான புதிய இணையத்தளம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் கொவிட் 19 தொற்றின் தற்போதைய நிலவரம் தொடர்பிலான தகவல்களை www.covid19.gov.lk என்ற இணையத்தள முகவரியின் ஊடாக பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் இந்த இணையத்தளத்தில் ஜனாதிபதி செயலகம், சுகாதார மேம்பாட்டு அலுவலகம், கொவிட் 19 தொற்று பரவுவதைத் தடுக்கும்தேசியசெயற்பாட்டுமத்திய நிலையம், அரசாங்க தகவல் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு ஆகிய நிறுவனங்களின் தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பொருளாதாரம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, சுற்றுலா, போக்குவரத்து அத்தியாவசியப் பொருள்களை விநியோகித்தல், சட்டம் மற்றும் பாதுகாப்பு போன்ற பல தகவல்களை அறிந்து கொள்ளக்கூடியதாகவும் இணையம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றுள்ளது. (க)

# 13 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு!

ஹற்றன், ஏப்.30
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றா மல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட 13 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஹட்டன் டிக்கோயா நகரசபையின் கீழ் உள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்களுக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ-44)

# கற்களால் தாக்கி முதியவர் கொலை

### இருவர் கைது

பதுளை, ஏப்.30
கற்களால் தாக்கி வயோதிபரொருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பதுளை கம்மான கிராமத்தைச் சேர்ந்த எஸ்.எம். ஜயவர்தன என்ற 68 வயது நிரம்பிய இரு பிள்ளைகளின் தந்தை, கற்களால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு குடும்பங்களிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கமே, தாக்குதல்களுக்கும், கொலைக்கும் காரணமென்று ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிபிலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு இளைஞர்கள் இருவரைக் கைது செய்தனர். அவர்கள் பிபிலை மஜிஸ்ரேட் நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். நீதிபதி சந்தேகநபர்களை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (க)



## மாமனிதர் தராகியின் 15ஆம் ஆண்டு நினைவு

வவுனியா, ஏப்.30

கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும், அரசியல் ஆய்வாளருமாகிய தர்மரத்தினம் சிவராமின் (மாமனிதர் தராகி)15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தால் இந்த நினைவஞ்சலி ஏற்பாடு செய்யப்பட்டது.

போராட்டப் பந்தலில் மாமனிதர் தராகியின் உருவப்படத்தை காட்சிப்படுத்தி, மெழுகுவர்த்திகள் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)

# நுண்நிதிக் கடன் வசூலிப்பால் பொதுமக்கள் அசௌகரியம்!

## ஊழியர்கள் வீட்டுக்கு வந்து நெருக்கடி எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.30

**நுண் நிதி கடன்கள் மற்றும் நிதி நிறுவன கடன்களை வசூலிப்பதற்காக நிறுவனங்களின் ஊழியர்கள் வீடுகளுக்கு வந்து நெருக்கடி ஏற்படுத்துகின்றனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் கால பகுதியில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் மக்கள் பெற்ற கடன்களுக்கான தவணை கட்டணங்களை மூன்று மாத காலத்துக்கு மீளப் பெற வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கடன் வசூலிப்பில் சில நிறுவனங்கள் தற்போதும் ஈடுபட்டுள்ளன. கடன் பெற்றவர்களின் வீடுகளுக்குச் செல்லும் ஊழியர்கள் தவணைப் பணத்தை செலுத்துமாறு நெருக்கடி கொடுத்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

வாழ்வாதாரங்களை முற்றாக இழந்துள்ள குடும்பங்கள் தவணைப் பணத்தை செலுத்த முடியாத நிலையில், ஊழியர்களின் நெருக்கடிகளால் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் கடன் வசூலிக்கும் சில ஊழியர்களிடம் கேட்ட போது; எமக்கு நிறுவனத் தலைமை அலுவலகத்தில் இருந்து தவணைப் பணத்தை சேகரிக்குமாறு அறிவுறுத்தல்கள் வந்துள்ளன. தவணை பணத்தை சேகரித்தால் மாத்திரமே அடுத்த மாதத்துக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று எமது அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளமையால் தான் தாம் கடன் வசூலிப்பில் ஈடுபடுகின்றோம் என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று பொதுமக்கள் கோருகின்றனர்.

அதேவேளை, கடந்த வாரம் நல்லூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு தவணை பணத்தைப் பெற நிதி நிறுவன ஊழியர் சென்றபோது செலுத்த பணம் இல்லாததால் வீட்டில் இருந்த பெண் தனது கணவருக்கு கொரோனோ தொற்று ஏற்பட்டு உள்ளது என கூறியுள்ளார். உடனே வீட்டில் இருந்து வெளியேறிய அந்த ஊழியர் சுகாதார பரிசோதகர் மற்றும் பொலிஸாருக்கு அது தொடர்பில் அறிவித்துள்ளார்.

அங்கு விரைந்த பொலிஸார் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் அந்த பெண்ணிடம் விசாரித்த போது செலுத்த பணம் இல்லாததால் தான் பொய் சொன்னேன் என்று கூறியுள்ளார். அந்தப் பெண்ணை பொலிஸார் கடுமையாக எச்சரித்தனர். தவணைப் பணத்தைக் கொடுக்குமாறு நெருக்கடி கொடுத்த நிறுவன ஊழியர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை - என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-37)

## 'வளி'யில் தங்கியிருந்தும் தொற்றக் கூடும் வைரஸ்

### ஆய்வொன்று கூறுகின்றது

கொழும்பு, ஏப். 30

கொரோனா வைரஸ், அதிக சனநெரிசல் மிக்க இடங்களிலும் காற்றோட்டம் இல்லாத அறைகளிலும் 'வளி'யில் தங்கியிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடும் என்று ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலைமைகளில் கொரோனா வைரஸ் 'வளி'யின் சிறு துணிக்கைகள் ஊடாக மனித உடலுக்குள் செல்வதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வுஹான் நகரிலுள்ள இரண்டு மருத்துவமனைகளின் கழிவறைகள், மூடிய சனநெரிசல் மிக்க அறைகள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் உடைமாற்றும் அறை போன்றனவற்றின் 'வளி'ப்பரப்பில், கொரோனா வைரஸின் மரபணுப் பொருள்கள் அடங்கிய 'வளி'த்துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு இயற்கை ஆராய்ச்சி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வைரஸ் எந்த அளவுக்கு வீரியமாக 'வளி'யின் ஊடாகப் பரவுகின்றது என்பது குறித்து தெளிவான விளக்கம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது மிக அரிதான சந்தர்ப்பங்களிலேயே நிகழக்கூடும். சீனாவில் சுமார் 75 ஆயிரம் கொவிட்19 நோயாளர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் எவருக்கும் வளியின் ஊடாக இந்த வைரஸ் பரவி இருக்கவில்லை என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (து)

## கட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கிண்ணியா, ஏப்.30

கிண்ணியா பொலிஸ் பிரிவு, பட்டியானூற்றில் கட்டுத் துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா, பட்டியானூற்று பகுதியைச் சேர்ந்த 34 வயது குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து கட்டுத் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்றும், சந்தேகநபரைத் திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். (எ-114)

## கொரோனா பரிசோதனைக்கான நிதியை அதிகரிக்க ஆலோசனை

கொழும்பு, ஏப்.30

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்வதால் பரிசோதனைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட விசேட செயலணிக் குழு, சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையிலும் பாதுகாப்பான முறையில் சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

கொவிட் 19 வைரஸ் குறிப்பிட்ட வேகத்தில் பரவி வருகின்றமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான தருணத்திலும் சுகாதார சேவையை முழுமையாகவும், பாதுகாப்பான முறையிலும் பெற்றுக் கொடுத்தல், வைத்தியர்கள் உள்ளிட்ட மருத்துவ நிர்வாகக் குழுவினரின் பாதுகாப்புக்காக மருத்துவக் குழுவில் குறிப்பிட்ட அளவு உறுப்பினர்களை மாத்திரம் இணைத்துக் கொண்டு பாதுகாப்பான முறையில் சுகாதார சேவையைப் பெற்றுக் கொடுத்தல், இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் மருத்துவக் குழுவினருக்கு அவசியமான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அங்கிகளைப் பெற்றுக் கொடுத்தல், கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் நோக்கில் பிரதேச மட்டத்தில் மருத்துவ சேவையில் ஈடுப்பட்டுள்ள மருத்துவத் தரப்பினரின் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்கு போதியளவிலான வாகனங்களை விரைவில் பெற்றுக் கொடுத்தல், வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் பி.சி.ஆர் பரிசோதனைகளை அதிகரித்தல் மற்றும் இந்தப் பரிசோதனையை முன்னெடுப்பதற்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ததற்காக ஆசியா அபிவிருத்தி வங்கி மற்றும் உலகவங்கியிடம் நிதியைப் பெற்றுக் கொள்ளல், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் செயற்பாட்டு மத்திய நிலையம் போன்ற நிலையங்களை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் செயற்படுத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருடன் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு அந்தச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தல் உள்ளிட்ட பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கலந்துரையாடலில் கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான விசேட செயலணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தன, மேலதிக செயலாளர்களான சுனில் த அல்விஸ், வைத்தியர் லக்ஷமி சோமதுங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, பிரதி பணிப்பாளர்களான மருத்துவர் அமல் ஹர்ஷ தி சில்வா, மருத்துவர் லால் பனாபிட்டி, மருத்துவர் பபா பலியவடன உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க)

## இலங்கை ஏதிலிகளுக்கு நியூசிலாந்தில் அபாயம்

கொழும்பு, ஏப்.30

நியூசிலாந்தில் குடியேறுவதற்காகக் காத்திருக்கின்ற இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஏதிலிகள் அபாய நிலைமையில் உள்ளனர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஏற்கனவே குடியேற்றத்துக்காக நியூசிலாந்துக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்களும், தங்கள் வாழ்விடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. 'த ரேடியோ நியூசிலேண்ட்' இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சர்வதேச நாடுகள் எல்லைகளை மூடியுள்ளன. ஏதிலிகளின் இட நகர்வுகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏதிலிகள் முகவரகம் தடைசெய்திருக்கிறது.

இந்த நிலையில் நியூசிலாந்தில் குடியேற்றப்படவுள்ள இலங்கையைச் சேர்ந்த ஏதிலிகள் உள்ளிட்ட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# ஊரடங்கு நிலைமை சட்டத்துக்குட்பட்டதே

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் விளக்கம்

கொழும்பு, ஏப்.30



**நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு நிலைமை சட்டத்துக்குட்பட்டது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகரவுடன் நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் வழக்கொன்று தொடர்பில் முன்னிலையான பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலை சட்ட ரீதியானது. இதற்கான அனைத்து அதிகாரங்களும் சட்ட ரீதியாக பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

1897 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தொற்று நோய்த்தடுப்பு, தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் ஊடாக அந்த அதிகாரம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாகப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக 5 வர்த்தமானிகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் புதிதாக வர்த்தமானிகளை அச்சிட்ட வேண்டியதில்லை.

கடந்த மார்ச் மாதம் 20, 25 ஆம் திகதிகளிலும், ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதியும் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதைவிடக் கடந்த 1925, 1960 ஆம் ஆண்டுகளில் வர்த்தமானி அறிக்கைகளும் இதற்குப் பொருந்தும். இதனூடாக தனிமைப்படுத்தல், போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்தல், ஒரு கட்டடத்திலிருந்து ஆள்களை அப்புறப்படுத்தல், தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எம்மால் முன்னெடுக்க முடியும். அதற்கான சட்ட ரீதியிலான அங்கீகாரம் உள்ளது.

நாம் இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமையையும் பிறப்பித்துள்ளோம். எவரேனும் நீதிமன்றில் இதனைச் சவாலுக்கு உட்படுத்தினால் நாம் பதிலளிக்கத் தயார். ஊரடங்கு நிலைமையை எவரேனும் மீறினால் கண்டிப்பாக நாம் அவர்களைக் கைது செய்வோம். தொற்றுநோய் தடுப்பு, தனிமைப்படுத்தல் கட்டளை சட்டத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் கீழும், அதனை ஒத்த அத்தியாயமான குற்றவியல் சட்டத்தின் 264 ஆவது பிரிவின் கீழும் இதற்கான இயலுமை உள்ளது - என்றார். (க)

# இந்திய புலமைப்பரிசில் பரீட்சை ஒன்லைனில்

கொழும்பு, ஏப்.30

இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான புலமைப் பரிசிலை வழங்குவதற்காக நடத்தப்படுகின்ற பரீட்சை விபரங்கள் இந்தியத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை மாணவர்களின் நலன்கருதி "இன்ட் சற்" (IND SAT) 2020 பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை நடத்தப்படவுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30 ஏப்ரல் 2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சையானது இணையவழி மூலமாக நடத்தப்படவுள்ளது. பரீட்சார்த்திகள் தமது வீடுகளிலிருந்தவாறு பரீட்சையை எழுதமுடியும். இந்தப் பரீட்சைப் புள்ளிகள் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களுக்காக கவனத்தில் கொள்ளப்படுமே தவிர 'ஸ்டடி இன் இந்தியா' (Study In India) திட்டத்தின் கீழ் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.studyinindia.gov.in என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். ஆர்வமுள்ள பரீட்சார்த்திகள் இணையவழி மூலமாக பதிவு செய்ய முடியு ம்- என்றுள்ளது. (க)

# வியாபார நிலையங்களுக்கு செல்வோருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.30

அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வியாபார நிலையங்களுக்குச் செல்வோருக்கு சுகாதார மேம்பாட்டு பணியகம் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சந்தர்ப்பம் கிடைத்த உடனேயே வியாபார நிலையங்களுக்குச் செல்லாமல் அவசியம் உள்ளதா என நன்கு சிந்தியுங்கள்.

வியாபாரத் தளங்களுக்குச் செல்லவும், வெளியே வரவும் முன்பு கொள்வனவு செய்ய வேண்டிய அவசியமான பொருள்களின் விவரங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

இதனால் வியாபாரத் தளத்தினுள் குறைந்த காலமே செலவாவதுடன், திரும்ப திரும்ப வீட்டில் இருந்து வெளியேறுவதையும் குறைக்க முடியும்.

பொருள்களை வீட்டில் இருந்தே பெற்றுக் கொள்ள கூடிய சகல சந்தர்ப்பங்களிலும் அந்தச் சேவையைப் பெறுங்கள். இதனால் நீங்கள் பாதுகாப்புப் பெறுவதுடன் நேரத்தை மிச்சப்படுத்துவதுடன் மட்டுமல்லாது, வியாபார தளத்தினுள் உள்ள மக்களின் தொகை குறைவதனால் முழு நாட்டுக்கும் நோய்த்தொற்றைக் குறைப்பதற்கும் ஏதுவாக அமையும்.

அருகில் உள்ள வியாபாரத் தளத்தைத் தெரிவு செய்யுங்கள். இதனால் அநாவசியமாக வீட்டில் இருந்து வெளியே இருக்கும் காலத்தைப் போல போக்குவரத்துக்காகச் செலவிடும் பணத்தையும் குறைத்துக் கொள்ள முடியும்.

கொரோனா வைரஸ் தொற்றின் சிக்கல் ஏற்படக் கூடிய தொகுதியினரான முதியோர் மற்றும் நீண்ட கால நோய்களுடன் பீடிக்கப்பட்டுள்ளவர்கள், வியாபாரத் தளங்களுக்குச் செல்வதை முடிந்தளவு குறைத்துக் கொள்வோம். அவர்களுக்கு அவசியமானவற்றை பெற்றுக் கொள்வதற்காக முடியுமான சகல வழிகளிலும் உதவி செய்வோம்.

எத்தகைய தொற்றக்கூடிய நோய் நிலைமைக்கும் முகம்கொடுக்க கூடிய சக்தியுள்ள இனமாக எழுந்து நிற்போம். என்றுள்ளது. (க-159)



# வவு. பொலிஸாருக்கு பாதுகாப்பு அங்கிகள்

வவுனியா, ஏப்.30

வவுனியாவில் கொரொனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பொலிஸாருக்குப் பாதுகாப்பு அங்கிகள் மற்றும் தெளி கருவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் வவுனியாவில் இனங்காணப்பட்டதை அடுத்து வவுனியா நகரில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸாரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், வன்னி மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவால் நேற்று இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் இவை கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மல்வளகி மற்றும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானவடு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-110)

# தெற்கிலிருந்து பணியாளர்கள் மன்னார் வருவதற்குத் தடை!

## மன்னார் நகர சபை தவிசாளர் தெரிவிப்பு

மன்னார், ஏப்.30

மன்னார் நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி வேலைத் திட்டத்துக்காக தெற்கில் இருந்து வரவிருந்த நூற்றுக் கணக்கான பணியாளர்கள் நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாகத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவின்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் எந்தப் பாதிப்புக்களும் இல்லை. நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டத்துக்காக தென் பகுதியில் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் மன்னார் வரவிருந்தனர். இது தொடர்பாக மன்னார் அரச அதிபருடன் கலந்துரையாடினேன். தெற்கில் இருந்து மன்னாருக்கு வரும் பணியாளர்களை உடன் நிறுத்துமாறு கோரியிருந்தேன்.

அதற்கமைய அவர்களின் வருகை நிறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் மக்களின் பாதுகாப்பே முதன்மையானது. அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவர முடியும். எமது மாவட்டத்துக்கு வைரஸ் தொற்றை ஏற்படும் செயற்பாடுகளுக்குத் துணை நிற்க முடியாது. இந்த விடயத்தில் உயர் அதிகாரிகள் கரிசனை கொள்ள வேண்டும் - என்றார். (எ-56)

# சமுர்த்தி அதிகாரிகளுக்கு விரைவில் நீதி வேண்டும்

## ஜகத் குமார கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

கடந்த தினங்களில் தாக்குதலுக்கு உள்ளாகியதோடு மேலும் பல காரணங்களுக்காக சேவையிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ள சமுர்த்தி அதிகாரிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய உற்பத்தி உதவி அதிகாரிகள் சங்கச் செயலாளர் எஸ்.ஏ.டி.ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

தங்களுக்கு ஏற்பட்ட அநீதி குறித்து உயர் அதிகாரிகளுக்கு அறிவித்த பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்கள் கடமைகளில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளனர் என்றும் அவர் மேலும்தெரிவித்தார். (து)

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்





கொரோனா தொற்றில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பிலான விவரங்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள், தொற்றுநீக்கி என்பன அடங்கிய தாங்கியொன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டது. (ம-222)

'சீரடி சாய்பாபா அறக்கட்டளை அமைப்பால்' செங்கலடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வந்தாறுமூலை மற்றும் கொம்மாதுறை கிராமங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)






கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள திருகோணமலைப் பகுதியில் வசிக்கும் பல குடும்பங்களுக்கு திருகோணமலை அந்தணர் ஒன்றியம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர். (ம)





கொழும்பு கன்டிலெயிற் லங்கா அமைப்பு தமது இணைப்பாளர் சின்கிலேயர் பீற்றரின் ஊடாக வறிய மாணவர்கள் 25 பேருக்கும், காணாமல் போன மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்குமாக சில குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியது. (ம)



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள 788 சிற்றூர்திச் சங்க சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

முல்லைத்தீவில் வசிக்கும் அதி கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு, கந்தப்பிள்ளை திலீபன் என்பவரின் நிதி உதவியில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)



ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள அராலி வடக்கு செட்டியார் மடம் பகுதியைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

43 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05
07
1950

மறைவு
01
05
1977

அமரர் குமரையா தேவராஜன்

மே மாதமே
உன்னில் எல்லா மலர்களும் மலர்ந்தது
எம் மலர் மட்டும் மடிந்து விட்டது

இல. 28, நக்கா
ஒழுங்கை, சுன்னாகம்,
யாழ்ப்பாணம்

என்றும் அழியாத நினைவுகளுடன்
மனைவி, மகளீமார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள் உற்றார்,
உறவினர்.



யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.இயூஜீன் பிரான்சுவீஸ் அடிகளார் தெல்லிப்பழை ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் போன்ற பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 265 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கினார். (ம)



மந்துவில் மேற்கு கேலம் அம்பாள் கோவிலில் கடந்த 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற மகா கும்பாபிஷேகத்திற்கு அலங்கரிப்பு பணியில் ஈடுபட்ட வேளையில் படையினரால் பிடித்துச்செல்லப்பட்டு பின்னர் காணாமல்போன எட்டுப் பேரின் குடும்பங்களுக்கு அன்மையில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-9)

■ ஐ.வி.மகாசேனன்









# ஹிட்லர்: புதிர்களின் புதல்வன்

வரலாறு உருவாக்கிய தலைவர்களுள் வரலாற்றை உருவாக்கிய தலைவர்களும் உள்ளனர். பிறப்பு முதல் இறப்பு வரையில் புதிரான வாழ்வுக்குச் சொந்தக்காரர் அடோல்ப் ஹிட்லர். ஒஸ்திரியாவில் 1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி அலோய்ஸ் ஹிட்லருக்கும் கிளாராவுக்கும் மகனாக பிறந்து 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி மரணத்தை வரவழைக்கும் வரையில் 'செய் அல்லது செத்து மடி' என ஹிட்லர் வாழ்ந்தார்.

இன்று ஏப்ரல் 30 ஹிட்லரின் 75ஆம் ஆண்டு நினைவு நாள் கடக்கின்ற போதிலும் முடிச்சுக்கள் அவிழ்க்க முடியாத மர்மமாகவே அவரின் வாழ்க்கை காணப்படுகின் றது. ஹிட்லர் என்ற தனிஒருவன் இல்லை என்றால் இன்றைய உலக ஒழுங்கு குறித்த வடிவத்தில் இருந்திராது. இரண்டாம் உலகப்போரின் உருவாக்கம், யூத இனப்படுகொலை என்ற இரு தவறுகளுக்குள் ஹிட்லரின் பல வெற்றிகள் மற்றும் குணங்கள் மறைக்கப்பட்டுவிட்டன. ஒரு வரலாற்றாசிரியரின் கடமை தீர்ப்பு எழுதுவதல்ல. புரிந்து கொள்வது தான். ஆயினும் ஹிட்லரின் வரலாற்றில் புரிதல் கடினமே. ஹிட்லரை வேறு எப்படியும் பார்க்க முடியாது எனும் அளவுக்கு மிகக்கறாராக ஹிட்லரை நாம் மதிப்பிட்டு முடித்து விட்டோம். எந்தவொரு புதிய ஆய்வும், புதிய பார்வையும் நம் மதிப்பீட்டை மாற்றிவிட போவதில்லை.

அடோல்ப் ஹிட்லரின் வரலாற்றை எழுதியுள்ள எழுத்தாளர்கள் பலரும் ஹிட்லரின் வரலாற்றில் இடைவெளிகள் அதிகம் உண்டு என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். இற்றைக்கு 25ஆண்டுகளுக்கு முன்னர் ஹிட்லரின் வரலாற்றை எழுதிய புகழ்பெற்ற எழுத்தாளர் ட்ரிவர், "ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையிலும் அடோல்ப் ஹிட்லர் அஞ்சத்தக்க ஒரு புதிராகவே இருக்கின்றார்." எனக்குறிப்பிடுகின்றார். இன்று எழுபத்தைந்து ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலும் அவ்வாறாகவே வரலாறு புதிராகவே நீள்கிறது. மற்றொரு புகழ்பெற்ற எழுத்தாளர் கிறிஸ்டியன் எவான் ராக்கே, "நம்மிடம் எந்த அளவுக்கு ஹிட்லரை பற்றிய ஆவணங்கள் இருக்கின்றனவோ அதைவிட அதிக அளவுக்கு வரலாற்று இடைவெளியும் இருக்கிறது. ஹிட்லர் மேலும் மேலும் புதிராகவே காட்சியளிக்கின்றார்." என ஹிட்லர் பற்றிய குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

ஓர் எழுத்தாளரின் வரலாற்றை எழுதும் போது, அவருடைய வாழ்க்கையும் அவருடைய படைப்புக்களும் அருகருகே வைக்கப்பட்டு அவைகளுக்கிடையிலான தொடர்பும் முரணும் விவாதிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு புரட்சியாளனின் அல்லது தலைவனின் வாழ்க்கை வரலாறு எழுதப்படும் போது காலகட்டமும், அதன் உளவியல் கூறுகளும், அரசியல் சமூக - பொருளாதார போக்குகளும், அரசியல் கோட்பாடுகளும், பண்பாட்டு நிகழ்வு போக்குகளும் அடிப்படைத் தரவுகளாக மாறிவிடுகின்றன. புரட்சியாளர் அல்லது தலைவர்களின் வாழ்க்கையில் நேரடியாக நடைபெற்ற நிகழ்வுகளோடு மேற்குறிப்பிட்ட பல்துறைசார்ந்த போக்குகளையும் கோட்பாடுகளையும் பொருத்தித் தான் அவர்களது வரலாற்றை எழுத வேண்டியுள்ளது. அவ்வாறு எழுதும் போது தான் அது முழுமையடைகின்றது.

எனிலும் ஹிட்லரின் வரலாற்றில் அம்முழுமையை இதுவரை பெறமுடியாத அளவு அவரை பற்றிய எதிர்மறையான எண்ணங்களே பலமாக விதைக்கப்பட்டுள்ளன. சர்வாதிகாரிகளின் ஆட்சி காலத்தில் ஆபாச அத்துமீறல்கள் அதிகமாகவே இருக்கும். எனிலும் ஹிட்லர் அத்தகைய ஆபாசங்களை ஒருபோதும் அனுமதித்ததில்லை. ஒரு விபச்சார விடுதி கூட அவரின் ஆட்சிக் காலத்தில் ஜேர்மனியில் இல்லை. "விபச்சாரம் பிளேக் நோய் போன்றது. சிறிதும் தயவு காட்டாமல் அது அழிக்கப்பட வேண்டும். சமுதாயத்தில் அழுகிப்போன விடயங்களை நாம் சுத்தப்படுத்த வேண்டும். இலக்கியம், சினிமா, கலை, பத்திரிகைகள், சுவரொட்டிகள், கடைகளின் விளம்பர பதாகைகள் எதிலும் ஆபாசம் இருக்க

> ஹிட்லரின் அனைத்து நற்குணங்களையும் மூடிமறைப்பதற்கு ஏதுவான காரணியாகியது யூத இன அழிப்பாகும். இனஅழிப்புக்காக நியாயம் கோரும் சமூகமாகிய நாம் ஹிட்லரின் இன அழிப்பை தவிர்த்து அவரை நியாயப்படுத்துவதும் முற்றான தவறாகும்.

நான் அனுமதிக்க மாட்டேன்." என்று ஹிட்லர் எச்சரித்துள்ளார். இலங்கை வரலாற்றில் சிங்களவர்களுக்கு எதிராக செயற்பட்ட தமிழ் மன்னர்களை கெட்டவர்களாகவே சித்தரித்த மகாநாமதேரரால், எல்லாளனின் ஆட்சி சிறப்பால் அவனை கெட்டவனாக சித்தரிக்க முடியவில்லை. அதே போன்றே ஹிட்லரின் வரலாற்றை வெளிச்சமூகத்துக்கு தந்தோர் ஹிட்லரை முழுமையாய் சர்வாதிகாரியாய் சித்தரித்த போதிலும் சில நல்ல பண்புகளை மறைக்க முடியாது போய்விட்டது. குறித்த பண்புகளே ஹிட்லரின் வரலாற்றில் உள்ள இடைவெளிகளையும் சுட்டிக்காட்டுகின்றது.

ஹிட்லரின் சர்வாதிகாரத்தன்மையை முன்னர் கூறியது போன்று பல்துறைசார் போக்குகளுடனும் கோட்பாடுகளுடனும் பொருத்தி ஆராய வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் அன்றைய சூழலில் ஜேர்மனின் வளர்ச்சிக்கு கடும்போக்கான தலைமையொன்றின் தேவையே காணப்பட்டது. முதலாம் உலகப்போரின் முடிவில் 1919ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வேர்சல்ஸ் உடன்படிக்கை மூலமாக முதலாம் உலகப்போரின் குற்றவாளியாக ஜேர்மனி அடையாளம் காணப்பட்டு ஜேர்மனின் பொருளாதாரம் முழுமையாக நசுக்கப்படும் வகையிலேயே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக ஜேர்மனி ஐரோப்பாவிலேயே மிகவும் நலிவுற்ற தேசமாக மாறியது. வேலை வாய்ப்பின்மை, வறுமை என்பது ஜேர்மனியினுள் இயல்பாகியது. இந்நிலையில் ஜேர்மனியை மீளக்கட்டியமைக்க ஹிட்லர் போன்ற தேசபக்தியுடைய கடும்போக்காளரையே ஜேர்மன் எதிர்பார்த்திருந்தது என்பதே நிதர்சனம். மக்களின் எதிர்ப்பு பலமாக இருந்திருப்பின் ஹிட்லரால் ஜேர்மனியில் ஆட்சியமைப்பதோ அதை நிலை பெறுவதோ சாத்தியமற்றதாக இருந்திருக்கும். எனிலும் ஹிட்லர் ஜேர்மனியை பேரரசாக உருவாக்கும் அளவிற்கு படை திரட்டி போரிட முடிந்ததாயின் ஜேர்மனி மக்கள் ஹிட்லரை ஏற்றனர் என்பதே ஊர்ஜிதமாகிறது. 'அடோல்ப் ஹிட்லர்' என்ற புத்தகத்தை எழுதிய பேராசிரியர் ஜான் டோலேன்ட், "ஹிட்லர் ஆட்சிக்கு வந்த நாலாவது ஆண்டில் ஏதாவது காரணத்தால் இறந்திருந்தால், உலகமே ஹிட்லரை ஜேர்மனியின் சரித்திரத்தில் தோன்றிய மிகச்சிறந்த மாமனிதன் என்று பாராட்டியிருக்கும்." எனக் குறிப்பிட்டுள் ளார்.

20ஆம் நூற்றாண்டில் நாடுகளை ஆக்கிரமித்தல் என்பது இயல்பான அரசியல் நடத்தையாகவே காணப்பட்டிருந்தது. பிரித்தானிய, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகளில் தங்கள் ஆட்சி பரப்பை விரித்திருந்தன. அவ்வாறானதொரு கனவையே ஹிட்லரும் கண்டார். ஜேர்மனியின் ஆட்சிப்பரப்பை விஸ்தரிக்க விருப்பம் கொண்டிருந்தார். ஹிட்லரின் ஜேர்மனி மீதான பற்றை, "ஜேர்மன் பேரரசில் தெருக்கூட்டுகிற ஒரு சாதாரண தொழிலாளியாக இருப்பது அயல்நாடு ஒன்றின் அரசனாக இருப்பதை விட மேலானது."என பெருமிதத்துடன் ஒருமுறை கூறியதிலிருந்து அறிய முடிகின்றது. இந்தத் தேசபக்தியே இரண்டாம் உலகப்போருக்கும் காரணமாகியது. நாடுகளை ஆக்கிரமித்தல் சரியெனக் கூறிவிட இயலாது. ஆயினும் அக்கால அரசியல் நடத்தையின் பிழையை ஒருவர் மீது மாத்திரம் சுமத்துவது தான் வரலாற்று முரணாகிறது. இரண்டாம் உலகப்போரின் உதயம் தான் பின்னாளில் ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகளின் விடுதலைக்குக் காரணமாகியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஹிட்லரின் அனைத்து நற்குணங்களையும் மூடிமறைப்பதற்கு ஏதுவான காரணியாகியது யூத இனஅழிப்பாகும். இன அழிப்புக்காக நியாயம் கோரும் சமூகமாகிய நாம் ஹிட்லரின் இனஅழிப்பை தவிர்த்து அவரை நியாயப்படுத்துவதும் முற்றான தவறாகும். அதில் உள்ள படிப்பினையையே வெளிஉலகுக்குச் சொல்ல வேண்டியவர்களாக உள்ளோம். ஹிட்லரின் புகழ் யாவற்றின் அழிவுக்கும் இன அழிப்பின் சாபமே காரணம் எனலாம். தமிழின அழிப்பின் கொடுங்கோலர்களின் அழிவிலும் தமிழர்களின் சாபம் நிச்சயம் ஓர் நாள் பலிக்கும் என நம்பிக்கை கொள்வோம். எனிலும் அன்றைய சூழலில் ஹிட்லரின் யூத இன அழிப்பை ஐரோப்பிய தேசங்கள் பெரும் பூதாகரமான விடயமாக மாற்றுவதும் வரலாற்று முரணாகவே காணப்படுகின்றது. யூத இனத்துக்கு எதிரான குரல் ஹிட்லரால் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. மாறாக ஹிட்லருக்கு முன்னரே ஐரோப்பிய நாடுகளில் பரவலாக யூத எதிர்ப்பு அதிகமாகவே காணப்பட்டது என்பதே யதார்த்தமாகும்.

இங்கும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் நடத்தையில் காணப்பட்ட பிழை தனித்து ஹிட்லர் மீதே சுமத்தப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு யூத தேசம் ஒன்று உருவாகுவதில் ஹிட்லரின் வகிபாகம் பிரதானமானது என்பதும் குறிப்பிடத்தக்கதே.

ஹிட்லரின் வாழ்வில் மலர்ந்த காதலும் சுவாரஸ்யமானதே. கல்லுக்குள் ரோஜாவாகவே வரலாற்றாசிரியர்களால் சித்தரிக்கப்படுகின்றார் ஈவா பிரவுன். யூதர்களின் கனவுகளில் கொலைவாள்களோடு மட்டுமே அலைந்து கொண்டிருந்த ஹிட்லர், ஈவாவின் கனவுகளை பூக்களால் நிறைத்தான். மரணம் நெருங்கும் ,வரை காதலியாகவே இருந்த ஈவாவுக்கு ஹிட்லர் 1945 ஏப்ரல் 29ஆம் திகதி 'திருமதி' என்ற மகுடத்தையும் அடுத்தநாள், ஏப்ரல் 30ஆம் திகதி இணைந்த மரணம் என்ற வெகுமதியையும் அளித்தார். இன்று ஹிட்லரின் காதல் மனைவி ஈவா பிரவுனினதும் எழுபத்தைந்தாம் ஆண்டு நினைவு தினமாகும். இரண்டாம் உலகப்போரின் முடிவில் நேட்டோ நாடுகளின் வெற்றிக்கு மாறாக ஜேர்மன் வென்றிருப்பின் இன்று உலகம் இன்னொரு வடிவில் காணப்பட்டிருக்கும். அத்துடன் ஹிட்லரையும் வரலாற்று நாயகனாக புகழ்ந்துரைக்கும். இதுவே யதார்த்தம். ஹிட்லரின் மரணமும் வாழ்க்கைக்கான தத்துவத்தையே பிரதிபலிக்கின்றது. வெற்றியிலேயே எம் பெறுமதி தங்கியுள்ளது. மாறாக தோற்கின் நாம் எத்தகைய பெறுமதியனாவர்களாயினும் இறுதி நிலை பூச்சியமே ஆகும். இதுவே உலக நியதி.

**யாழ் நகரில் மாடி வீடு வாடகைக்கு உண்டு**

Full AC, Non AC கீழ் வீடு 3 றூம். 1 பெரிய கோல். அற்றாச் பாத் றூம். மேல் வீடு 3 றூம். 1 பெரிய கோல். அற்றாச் பாத் றூம்.

கடற்கரை வீதி, ஹோலிகுறொஸ் ஆஸ்பத்திரி அருகாமையில்.

தொடர்பு: 021 222 7893, 077 420 7442

**அடையாள அட்டை**

தொழில் அடையாள அட்டைகள் செய்து தரப்படும்.

ஈஸ்வர் டிஜிட்டல் அச்சகம்-யாழ்ப்பாணம்.

077 165 9845

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**யாழ்/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின்**
மாணவியும் **ராஜ்வதனன்-பிரதிபா**
தம்பதியரின் புதல்வியுமான

### செல்வி ராஜ்வதனன் ஸீபா


அவர்கள்

கடந்த ஆண்டு (2019) நடைபெற்ற-கல்வி பொது தராதர சாதாரணதர பரீட்சையில் **9A** தர சித்தியினைப் பெற்றுள்ளார். இவர் மேலும் உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளையும், பல பட்டங்களையும் பெற்று சாதனை படைக்க வேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துவோர்**
**டடா, மம்மி,**
**அண்ணா, அம்மம்மா, உறவினர்,**
**நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 29 |
| 03 | 04 |
| 1932 | 2020 |



### அருணாசலம் நவரத்தினம்

**(ஓய்வுநிலை உபஅதிபர்-யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)**

சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் லேன் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் நவரத்தினம் நேற்று (29.04.2020) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அருணாசலம் பொன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், செல்வநாயகியின் (ஓய்வுபெற்ற அதிபர், யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை வடிவேலு, சிவபாக்கியம், செல்லத்துரை, தங்கநாயகி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இ.சிவகுணதேவி, வ.சிவலீலாதேவி, தே.கலாவாணி, பி.திகழ்ஜோதி, இ.பத்மாசினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இரத்தினகுமார், தேவேந்திரராசா, பிரமானந், இராயரூபன் ஆகியோரின் பெரியப்பாவும், தேஷாளினி, அனுஸ்காந், தேஜஸ்வினி, ஹிருஷாளினி, லிசாயினி, ஷிவஷாந், வேணுஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2020) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22.04.1929 | 31.03.2020 |

### நடராசா பொன்னம்மா

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
**அஞ்சல் சமூகம்**
**காரைநகர்**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 28 |
| 11 | 04 |
| 1943 | 2020 |



### சுப்பிரமணியம் சரவணபவன்

**(சுப்பிரமணியம் அன்கோ உரிமையாளர்)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் இடைப்பிட்டி (மில்றோட்), கொழும்பு மாளிகாவத்தை ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சரவணபவன் கடந்த (28.04.2020) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், செந்தூர்ச்செல்வன், கிருத்திகா, தணிகைவாசன், அருணா ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி, சுஜா ஆகியோரின் மாமனாரும், கோகுலன், கரிசன், ஜெகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, கார்த்திகேசு, பூவதி மற்றும் பத்மினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2020) வியாழக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு LANKA FLORISTS இல் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
வாசன் (மகன்-இலங்கை)
94774084504
செந்தூர் (மகன்-அவுஸ்திரேலியா)
610412551472

தகவல்:
**குடும்பத்தினர்.**

**ES Printers**
**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 31 |
| 07 | 03 |
| 1944 | 2020 |



### அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம்

(ஸ்தாபகர்-சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்)

**திதி:- ஸப்தமி**

அன்பினாலுயர்ந்து பண்பாளனாய் வாழ்ந்து
இன்பமாய் இணைந்து பாலருடன் பழகி
வெள்ளி விழா வரை எங்களை வழிநடத்திய தாத்தாவை
நாங்கள் இனி எப்போது காண்போம்
துன்பமாய் ஆன உம் பிரிவில் துவழ்கின்றோம்
உங்களைப் போல் ஒரு உறவு இனி எமக்கேது.

கடந்த 31.03.2020 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எங்கள் தலைவனின் 31ஆம் நாள் நினைவு தினமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (30.04.2020) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம் பெறுகின்றது. இதனை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் இக்கட்டான இவ்வேளையிலும் எமது குடும்பத் தலைவரின் துயர் கேட்டு நேரில் வருகை தந்தோருக்கும், தொலைபேசியில் துயர் பகிர்ந்தோருக்கும், பதாகைகள், மலர்ச்செண்டுகள் வழங்கியோருக்கும், துண்டுப் பிரசுரம், இரங்கலுரை வழங்கியோருக்கும், இறுதிவரை பல்வேறு வகைகளில் உதவிகளை வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கண்டுவில் ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

# கொரோனா அற்ற நாடாகியது ஏமன்



சனா, ஏப். 30
கொரோனா இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது ஏமன்.
கொரோனாவால் ஏமனில் ஒரேயொருவரே பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்குத் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. அவர் நலம்பெற்று வீடு சென்றதை அடுத்து கொரோனா வைரஸ் இல்லாத நாடாக ஏமன் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சீனாவால் எமக்கு நரக வேதனையே

## ட்ரம்ப் ஆவேசம்

சீனாவால் அமெரிக்கா நரக வேதனை அனுபவிக்கின்றது. அமெரிக்கா மட்டுமல்ல 184 நாடுகள் இவ்வாறு வேதனைப் படுகின்றன - என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

கொரோனா வைரஸின் உருவாக்கமும் பரவலும் சீனாவின் திட்டமிட்ட செயல்களே என்று ஆரம்பம் முதலே சாடிவருகின்றார் ட்ரம்ப். அவ்வப்போது சீனாவுக்கு எதிராகக் கடும் பரப்புரைகளையும் அவர் மேற்கொள்கின்றார். இந்த நிலையிலேயே ட்ரம்ப் மீண்டும் சீனாவுக்கு எதிராக முழங்கியுள்ளார்.

ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது: 'இதை நான் அடிக்கடி கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நம்ப மிகவும் கடினமாக இருக்கிறது. கொரோனாவை அது தோன்றிய இடத்திலேயே கிள்ளி எறிந்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. இதனால் இன்று 184 நாடுகள் நரக வேதனையை அனுபவித்து வருகின்றன.

அமெரிக்கா தன் தொழிற்துறையில் சீனாவை நம்பியிருப்பதை குறைக்க வேண்டும் என்றும் சீனாவிடமிருந்து கொரோனா இழப்பீடாக பெரிய தொகையைக் கேட்க வேண்டும் என்றும் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. கொரோனாவின் தாக்கம் முடிந்த பின்னர் சீனாவுடனான வர்த்தகம் குறித்து தீர்க்கமாக முடிவெடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் - என்றார். (ம)

# அமெரிக்காவில் மீண்டும் எகிறியது கொரோனா!

வொஷிங்டன், ஏப். 30
அமெரிக்காவில் மீண்டும் கொரோனா வைரஸ் எகிறியுள்ளது. கடந்த இரண்டு நாள்களாக அங்கு 1,500க்கும் உட்பட்ட உயிரிழப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழப்பு 2,500ஆக அதிகரித்தது.
கொரோனாவால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் நாள்தோறும் எகிறிக்கொண்டு உள்ளது. அமெரிக்காதான் மிகமிக அதிகமாக பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. சுமார் 11 லட்சம் பேர் அமெரிக்காவில் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 25 ஆயிரம் பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 2,500 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

## கொரோனா பரவாது என்று நம்பி

# விஷச் சாராயம் குடித்த 700 பேர் ஈரானில் சாவு!

கொரோனா பரவாது என்ற வதந்தியை நம்பி விஷச் சாராயம் குடித்த 700 பேர் ஈரானில் உயிரிழந்தனர்.
இது தொடர்பில் ஈரானின் அரசு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:
ஈரானில் கடந்த சில நாள்களில் விஷச் சாராயம் குடித்ததில் 700க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். கொரோனா தொற்று பரவாது என்று எண்ணி அவர்கள் அதனை அருந்தியுள்ளனர். இத்தகைய மடமைத் தனங்களை மக்கள் நம்பக்கூடாது. எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளாதீர்கள் - என்றுள்ளது. (ம)

**A/L Physics**
Online classes with theory and pastpapers 1979-2019
(Translated)
Tamil & English Medium
இணைய வழி பௌதிகவியல் வகுப்புக்கள்
கடந்தகால வினாத்தாள்களுடன் மீட்டல் 1979-2019
A.Jenukananth
Faculty of Engineering மொறட்டுவ பல்கலைக்கழகம்)
076 546 3054


# 31 ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
14.09.1950

மறைவு
04.04.2020

அமரர்

## தேசமானிய சபாநாயகம் ரவீந்திரன் J.P.U.M

(சட்டத்தரணியும், சமாதான நீதவானும்)

திங்களொன்று ஆனதப்பா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!

கடந்த 04.04.2020 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் தேசமானிய சபாநாயகம் ரவீந்திரன் (J.P.U.M) அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 04.05.2020 (திங்கட்கிழமை) அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

மற்றும் எமது குடும்பத் தலைவர் சுகயீனமுற்று இருந்தவேளை ஆதரவுடன் பணியாற்றிய வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்களுக்கும் அவர் மரணித்த வேளையிலிருந்து இறுதிப் பயணம் வரை எம்மோடு உடனிருந்து அத்தனை உதவிகளையும் செய்து முடித்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் கிரியைகளை நடத்திய அந்தணர் யாபேருக்கும் எம் நன்றியதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



வெளிச்சவீட்டு ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.No: 011 226 4795




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.